உ

கடவுள் துணை.

செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி—௪௬.] விரோதி-ஹூ மார்கழிமீ [பகுதி—௨.

Vol. 46. December 1949—January 1950 No. 2.

உள்ளுறை.

நீர்ரமகளிரும் யாழ்நூலாசிரியரும்:- } திரு. பண்டித. வி. சீ. கந்தையா அவர்கள். ௪௧—௫௦

திராவிடமொழி களின் உறவு:— } திரு. N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள் B.A. B.L. ௫௧—௫௬

உவவனம்:—திரு. N. S. தாத்தாசாரியரவர்கள் ௫௭—௬௪

திருச் சிறுபுலியூர்-உலா குறிப்புரையுடன்:— } பத்திராசிரியர் 1—16

பத்திராசிரியர்—திரு. கி. இராமாநுஜையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1950.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by T. K. Ramanuja Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணன்,

மானேஜர்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி—சசு.] விரோதி-ஹு மார்கழிமீ [பகுதி—உ.

Vol. 46. December 1949—January 1950 No. 2.

நீரரமகளிரும் யாழ்நூலாசிரியரும்

[திரு. பண்டித. வி. சீ. கந்தையா அவர்கள், சிவாநந்த வித்தியாலயம், மட்டக்களப்பு, இலங்கை.]

யாழ்நூல் எனும் பெயரால் ஒரு இசைத்தமிழ்நூலை முத்தமிழ் முனிவராகிய விபுலாநந்தர் தமிழுலகிற்கு யாத்தளித்தார். மும்மையாக வளர்க்கப்பெற்ற நம் தமிழ்ப்பொக்கிஷத்திலிருந்து மறைந்துபோன நடுநாயகத்தை—இசைத்தமிழ்ச்செல்வத்தை — இந்நூல் இன்று நமக்கு எடுத்துத் தந்திருக்கின்றது. இதனை உருப்படுத்தித் தருவதில் அடிகள் செய்த ஆராய்ச்சிகளும் அடைந்த அநுபவங்களும் மிகப் பல. அவருடைய ஆராய்ச்சி சிலப்பதிகாரத்து அரங்கேற்றுகாதையினை நிலைக்களனாகக்கொண்டு தொடங்கிற்று; அநுபவம், ஈழநாட்டு மட்டக்களப்பு வாவியிலெழும் இன்னொலி முதலாகத் தொடங்கிற்று. காற்றினும் காவினும் யாற்றினும் எங்கணும் இன்னிசைகேட்டு மகிழ்ந்து இசைவளர்த்த தமிழ்மக்களின் பண்டைச்சிறப்புக்களைத் தாம் கேட்டனுபவித்த அடிகள் விளங்கும் மட்டுநீர்நிலையுள் எழுந்த வொருநாதத்திலிருந்து தொடங்கி ஆராயப்புகுந்தார்கள். இந்த அநுபவம் கனிந்த கனியே "நீரரமகளி ரின்னிசைப்பாடல்" எனும் உரைத்தொடராக விக்கிரம ஆண்டு (1940) கார்த்திகைத்திங்களிலே தமிழ்ப்பொழிலில் (துணர் 16; மலர் 8) வெளிவரலாயிற்று.

சுவாமிகள் மட்டக்களப்பிற் சிவாநந்தவித்தியாலயத்தே தங்கியிருந்தகாலத்துப் பல தடவை அண்மையிலுள்ள வாவியிலெழும்

இவ்வின்னொலியைக்கேட்கச் சந்தர்ப்பம் பெற்றுள்ளார்கள். இந்தியாவிலிருந்து இராமகிருஷ்ணமடத்துச் சாதுக்கள் இடையிடை இங்கு வருவது வழக்கம். வருவோர் 'பாடும் மீன்' (Singing Fish) இசைகேட்க விரும்புவர். சுவாமிகள் அவர்களை அழைத்துச் சென்று, எழும் இசையைப்பற்றி விளக்கமும் சொல்வார்கள். ஒரு முறை வங்காளத்திலிருந்து இசைவல்லுநரான ஒரு சாது வந்திருந்தார். அன்று இளவேனிற் பூரணைநாள். அந்தச் சாதுவுடன் சுவாமிகளும் தோணியேறி இசைபருகச்சென்றனர். அவ்வாறு சென்றுவந்த நிகழ்ச்சியை அடிப்படையாகக்கொண்டு நீரரமகளிரைப்பற்றிய பாடல் எழுவதாயிற்று.

இற்றைக்குச் சிலநாட்களின்முன்னர் வெளிவந்த 'ஈழமணி' விபுலாநந்தர்நினைவுமலரில் 'நீரரமகளிர்' எனும் தலைப்பில் ஒரு கட்டுரை இருந்தது. அக் கட்டுரையாசிரியர் அறிஞர். சீ. எம். இராமச்சந்திரன்செட்டியாரவர்கள். அக் கட்டுரையிலே சுவாமிகளுடைய பாடலைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கும் பகுதியினை இங்கு யாம் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளுதல் அவசியமாகின்றது. அப்பகுதி.—

> "ஈழநாட்டிலே பண்டைத் தமிழ்க்குடியேற்றப் பட்டினமாகிய மட்டக்களப்பிலே அழகிய நீர்நிலைகள் உண்டு. அவற்றில் ஒன்று புளியந்தீவுக்கும் கல்லடிக்கும் இடையில் இருப்பது. இங்கே இளவேனிற்காலத்தில், முழுமதியநாளில் படகில் ஏறிச்சென்றால் மிகவும் மனோரம்மியமான இன்னிசைகேட்கலாம். அவ்விசையைப் பற்றிய பல கதைகள் உண்டு. மேல்நாட்டார்கள் அவ்விசை ஒரு வகை மீனினத்தால் எழுப்பப்படுகின்றது என்பர். ஆனால் மீன் பாடுவது இல்லையென்று அடிகள் குறித்துள்ளார்கள். இவ்விசை நீரரமகளிர்களாலே பாடப்படுகின்றது என்றே அடிகள் வெளியிட்டுள்ளார்கள். இவ்விசையைக்குறித்து ஒரு தமிழ்க்கவிஞர் பாடியுள்ள ஒருகவிதையை யாழ்நூலில் அடிகள் வெளியிட்டுள்ளார்கள். அதில் ஒரு பகுதிமட்டும் எடுத்துக்காட்டுவோம்:—
>
> நீல வானிலே நிலவு வீசவே
> மாலை வேளையே மலைவு தீருவோம்
> சால நாடியே சலதி நீருளே
> பாலை பாடியே பலரொ டாடுவோம்

நிலவு வீசவே மலைவு தீருவோம்
சலதி நீருளே பலரொ டாடுவோம்'

நிசரி காகமா மபத நீநிசா
சரிக மாமபா பதநி சாசரீ.

இதைப் பாடிய கவிஞரின் மனஎழுச்சியைப்பற்றி இக்கவிதை யே காட்டுகின்றதல்லவா''

என்பதாகும். இக் கட்டுரைப்பகுதியிற் சில பொருந்தாமைகள் உள்ளன. அவற்றுள் முக்கியமானது 'விபுலாநந்த அடிகள் மற்றொரு தமிழ்க்கவிஞருடையபாடலைத் தம் யாழ்நூலில் வெளியிட்டுள்ளார்கள்' என்பதாகும்.

அடிகளார் தமிழ்ப்பொழிலில் வெளியிட்ட 'நீரரமகளிர் இன்னிசைப்பாடல்' என்ற கட்டுரை முழுவதையும் யான் அப்போது சேர்த்துவைத்துள்ளேன். அக்கட்டுரையின் இசையாராய்ச்சிக் கவசியமான ஒரு பகுதியை யாழ்நூற்பாயிரவியலுள் அடிகள் எடுத்தாண்டார்கள். கட்டுரையின் முற்பகுதி ஈழநாட்டையும் மட்டக்களப்பையும்பற்றி ஆராய்ச்சியுடன் விளக்குவதாகும். கட்டுரையில் நீரரமகளிரைப்பற்றியுள்ள பாடலானது சுவாமிகளாலேயே புனையப்பெற்றது. பாடற்றொடக்கத்தின்முன்னர் அடிகள்கூறும் வசனப்பகுதி 'பாடல் வேறொருவருடையது' என்ற விளக்கத்தைச் செட்டியாரவர்களுக்குக் கொடுத்திருக்கவேண்டும். அடிகள்கூறும் அப்பகுதியை இங்குத் தந்து உண்மையை அறிவோம்:—

''இலங்கைக்குவரும் மேனாட்டார் இவ்விசையைச் செவிமடுப்பதற்காக மட்டக்களப்பிற்கு வருவதுண்டு. இவ்விசை நீரினுள்ளிருந்தெழுவதாதலின் நீர்வாழ்செந்துவின் ஒலியாதல்வேண்டும் என எண்ணிப்போலும் அந்நியநாட்டார் இதனைப் பாடும் மீன்—Singing-fish இசையென்பர். மீன்கள் நீரினுட்குதித்து ஆடுதலைக் கண்டோமேயன்றி அவை மகிழ்ச்சியாற் பாடுதலை யாண்டும் கேட்டிலமாதலின் அந்நியநாட்டாரது உரையினை யாம் ஏற்றுக்கொள்ளமாட்டேம். கலைவல்லார் காணாத உண்மைகள் சில கவிஞரது உள்ளத்து உதிப்பனவாதலின் இவ்வற்புத கீதவொலியைக் குறித்துத் தமிழ்ப்புலவரொருவர் எழுதிய செய்யுள் ஒன்றினை ஈண்டுத் தருகின்றாம். அறிஞர் உவந்தேற்று அருள்புரிவாராக. கவிஞர்க்கு இயல்பாக அமைந்த புனைந்துரையெனக்கொள்ளினும் இழுக்காது.'' என்பது குறித்தபகுதி.

பழந்தமிழ்ப் பண்பாடு கனிந்த அடிகளாருடைய உள்ளம், தமது செய்யுளென்று வெளியாகக்கூற மறுத்தமையாற்போலும் தமிழ்ப்புலவரொருவர் எழுதிய செய்யுள் என்று குறிப்பாய்க் கூறினர். ஆயினும், "அறிஞர் உவந்தேற்றுக்கொள்வாராக" என்னும் அவையடக்கமொழியினாலும், "கவிகற்பனையெனக் கொள்ளினும் இழுக்காது" என இலேசாகக் கூறுவதினாலும், செய்யுள் அடிகளாருடையதேயென்பது தெளியப்படுகின்றது. பாடல் முழுவதையும் இங்குக் கவனித்தல் பொருத்தமாகும்:—

"தண்ணளிசெங் கோலாய்த் தனியறமே சக்கரமாய்
மண்முழுதும் ஆண்டபுகழ் வாமன் அடியிணையே
என்றும் அழியா திலங்கும் சமனொளியும்
கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவற்கு
மூவடிமண் ணீர்தளித்து மூவாப் புகழ்படைத்த
மாவலியின் பேரால் வயங்கு மணிநதியும்
காவும் பொழிலும் கழிமுகமும் புள்ளணிந்த
ஏரியும் மல்கி இரத்தினத் தீவமென
ஆரியர் போற்றும் அணிசால் இலங்கையிலே
சீரார் குணதிசையைச் சேர்ந்து வளர்புகழும்
ஏரால் இயன்றசெந்நெல் இன்சுவைத்தீங் கன்னலொடு
தெங்கி னிளநீரும் தீம்பலவின் அள்ளமிர்தும்
எங்கும் குறையா இயலுடைய நன்னாடு
மட்டக் களப்பென்னும் மாநாடங் நாட்டினிடைப்
பட்டினப் பாங்கர்ப் பரந்த தோணிமுகமாய்
ஐங்கரன் கோயில் அமிர்த கழிக்கணித்தாய்ப்
பொங்கு கழியுட் புகும்நீர் நிலையொன்று
நீர்நிலையி னுள்ளே நிகழ்ந்த அதிசயத்தைப்
பாரறியக் கூறும் பனுவல் இதுவாகும்.

மாசகன்ற மணிவிசும்பில் வயங்குநிறை மதியம்
மலர்க்கிரண ஒளிபரப்ப வளருமிள வேனில்
வீசுதென்ற லொடுங்கூடி விளையாடல் கண்டு
விண்ணகத்தார் மண்ணகத்தில் விழைவுகொளும் யாமம்;

அஞ்சிறைய புள்ளொலியும் ஆன்கன்றின் கழுத்தில்
அணிமணியின் இன்னொலியும் அடங்கியபின் நகரார்
பஞ்சியைந்த அணைசேரும் இடையாமப் பொழுதில்
பாணனொடும் தோணிமிசைப் படர்ந்தனனோர் புலவன்;

தேனிலவு மலர்ப்பொழிலிற் சிறைவண்டு துயிலச்
செழுந்தாங்கத் தீம்புனலுள் கந்தினங்கள் துயில
மீனலவன் செலவின்றி வெண்ணிலவில் துயில
விளங்குமட்டு நீர்நிலையு ளெழுந்ததொரு நாதம்;

நீல வானிலே நிலவு வீசவே
மாலை வேளையே மலைவு தீருவோம்
சால நாடியே சலதி நீருளே
பாலை பாடியே பலரொ டாடுவோம்
நிலவு வீசவே மலைவு தீருவோம்
சலதி நீருளே பலரொ டாடுவோம்;

நிசரி காகமா - மபத நீநிசா
சரிக மாமபா - பதநி சாசரீ
ரிகம பாபதா - தநிச ரீரிகா
கமப தாதநீ - நிசரி காகமா;

என்ன எழுந்த அந்த இன்னிசைத்தீம் பாடலினைக்
கன்னலெனக் கேட்டுக் களித்த புலவனும் தன்
அன்பன் முகநோக்கி ஆகா! இவ் வற்புதத்தை
என்னென் றுரைப்பேன்! இசைநூற் பொருளுணர்ந்தேன்!
ஐந்தாம் நரம்பின் அமைதியினை யானறிந்தேன்!
காந்தாரத் தைந்தாய்க் கனிந்த நிஷாதமெழும்
செய்ய நிஷாதச் செழுஞ்சுரத்தின் பஞ்சமமே
வையம் புகழ்கின்ற மத்திமமாம் மத்திமத்திற்கு
அஞ்சாஞ் சுரமாம் அணிசட்ஜம் சட்ஜத்தின்
பஞ்சமமே பஞ்சமமாம் பன்னு ரிஷபமதற்கு
அஞ்சாஞ் சுரமாய் அடையும் அணிரிஷபத்
தெஞ்சாத பஞ்சமமாய் எய்திநிற்குந் தைவதமே
தைவதத்திற் கைந்தாய்த் தனித்த காந்தாரமெழும்
இவ்வகையே எழாகி இன்னிசையாழ் தீங்குழலில்
நாதமாய்த் தோன்றி நவைதீர் அமிழ்தனைய
கீதமாய் மேவும் கிளையாய்ப் பகைநட்பாய்
நின்ற முறையை நினையின் இவை கிளையாம்
என்ற பொழுதில் எழுவர் மடநல்லார்
நீரு ளிருந்தெழுந்து நின்றார் அரமகளிர்;
ஆதலினால் மூப்பறியார் அந்தீங் குழலொலியும்
ஓதிய யாழின் ஒலியு மெனமொழிவார்
பைம்புனலின் மேற்படர்ந்த பாசிநிகர் கூந்தலார்

அம்பொன்னின் மேனி அரையின்கீழ் மீன்வடிவம்
செங்கமலம் போற்கரங்கள் திங்கள் மதிமுகத்திற்
பொங்கிய புன்முறுவல் பூத்தார் புலமையார்
கவிமுகத்தை நோக்கிக் கனிந்துரைப்பார் யாங்களையே
புவியிலெனத் தாரமென்பார் புதல்வியிவள் பேருழையே
உழையின் மகள்தூற்பே ருற்றாள் இளிதாயை
பிழையில் இளிபாற் பிறந்தாள்பேர் துத்தமே
துத்தம் பயந்த சுதைவிளரிப் பேர்பூண்டாள்
உய்த்த விளரிக் குறுதாயை கைக்கிளையே
பொன்னின் கபாட புரத்துறைவோம் மாவலிநீர்
தன்னிற் படிந்து சமனொளியைக் கும்பிடுவோம்
ஆடுவோம் பாடுவோம் ஆராத காதலினால்
வாடுவோம் பின்னர் மகிழ்வோம் நகைபுரிவோம்
அச்சமுறுவோம் அடையாதார் தங்களையாம்
இச்சை யறவே இழித்துரைக்கும் நீர்மையேம்
உருத்தெழுந்து கோபிப்போம் உண்மை யுரைப்போம்
அருத்தியொடு வீரம் அறைவோம் வியப்புறுவோம்
திங்கள் நிறைநாளிற் சேர்வோமிந் நீர்நிலையைக்
கங்குல் கழியுமுன்னே கார்படிந்த மைக்கடலைச்
சென்றியாஞ் சேர்வோமெஞ் செய்கை யிதுவென்றார்
ஒன்றாக நீருள் ஒளித்தார் தமிழ்ப்புலவன்
சிந்தையை அன்னார்பாற் சேர்த்தி மனைபுகுந்தான்
வந்த இசையின் வரன்முறையு மீங்கிதுவே.''

பாட்டின் இடையே, ''பாணனொடும் தோணிமிசைப் படர்ந்தனனோர் புலவன்'' என்று அடிகள் குறிப்பிடுவது மேலே நாம் கூறிய வங்கத்துச் சாதனையும் தன்னையுமேயாகும். இஃது அடிகளிடம் யான் நேரில் கேட்டும் அறிந்த உண்மையாகுமென்பதை அறிஞருலகிற்குப் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளவிரும்புகின்றேன்.

இரண்டாவதாக, 'இவ்விசை நீரரமகளிராலேயே பாடப்படுகின்றது' என்று அடிகள் கருதியதாக நாம் கொள்ளக்கூடாது. உண்மையாக மீன்கள் பாடுவதில்லையென்று, பாடும் மீன் (Singing Fish) என்ற மேனாட்டார்கூற்றை மறுத்துவிட்டுக் கற்பனைக் கண்களால் அதை நோக்கி, ஏழு இசைப்பிறப்பினையும், எழுவர் அரமகளிராகப் புனைந்து கூறினார்கள். இசைக்கு இயல்பான மென்மை, அழகு, நயம் என்பவற்றை அவர்தம் தன்மையாகவும்,

சேர்ந்துவரும் நவரசங்களையும் அவர்தம் குணங்களாகவும் அடிகள் கூறுகின்றதிலிருந்து அக் கற்பனை மிகுதியும் நயம்பயப்பதா யிருக்கின்றது. இன்னும், யாழ்நூலுள் நீரரமகளிர் இன்னிசை பற்றித் தாம் எழுதிய செய்யுளைத் தந்து அதன் முடிவிலேகூறும் வசனப்பகுதியால் மட்டுநீர்நிலையுளிருந்தெழும் இவ்வின்னிசையின் உண்மைக்காரணத்தை ஒருவாறு கூறுகின்றார். அப்பகுதியை இங்கு எடுத்துக்காண்பது பயன்தருவதாகும்:—

> “நீரரமகளிர் தோன்றியது கவிகற்பனையாமெனக்கொள்ளு மிடத்து இசைத்தோற்றத்திற்குப் பிறிதோர் காரணம் காட்டல் வேண்டும். மணி, கடல், யானை, குழல், மேகம், வண்டு, தும்பி, சங்கு, பேரிகை, யாழ் எனக் கூறிய பத்துவகை நாதங்களுள்ளே சங்கமானது முரற்சி, முழக்கம் என இருவகைப்படும் என்று அறிஞர் கூறுவர் ... ... இம்முரற்சியானது சங்கினது வளர்ச்சிக்கேற்ப நாதம்வேறுபட்டுத்தோன்றும். மட்டக்களப்புவாவி கடலொடுகலப்பதாதலின் ஒருவகைச் சங்கு வாழ்தற்கிடமாயிற்று. அளவிற் சிறியவும் பெரியவுமான சங்குகள் இடையிட்டு முரல்வதினாலே ஏற்படும் ஓசையின் சேர்க்கை இசைத்தன்மைபெற்றுத் தோன்றுகின்றது. அஃதெவ்வாறாயினும் கவிதையுட் கூறப்பட்ட நீரரமகளிரதுகிளையிற் பிறப்புமுறை இசைமரபிற்கு ஒத்ததேயாகும்” என்பது அவர்கூற்று.

இலங்கையின் ஏனையபகுதியினரும், மற்றும் வெளிநாட்டாரும் இதனைப் பாடும் மீன் - இசை யென்றழைத்தாலும் மட்டக்களப்பு நாட்டில் இதனை ‘ஊரிபாடுதல்’ என்றே சொல்கின்றார்கள். இந்த ஊரியானது அடிகள் மேற்குறிப்பிட்டபடி சங்கினத்தைச்சேர்ந்தது; தோற்றத்திலும் சங்கைப்போன்று, ஆனால் சற்று மெலிந்து நீண்டதாக இருக்கும். சிறியதும் பெரியதுமான ஊரி பலவற்றைக் கோடை காலங்களில் வாவிக்கரையெங்கும் காணலாம். இதில் மிகச் சிறியது கால் அங்குல நீளம் உடையதாக இருக்கும். பெரியதின் நீளம் பெரும்பாலும் மூன்றங்குலத்துக்குமேல் இல்லையெனலாம். இவை வாவியினடியிற் காணப்படும் பாறைகளிற் படிந்துகிடப்பனவென் றும், நீர் கலக்கமற்று வானமும் களங்கமற்றுள்ள காலமாகிய சித்திரை—ஆடி (பெரும்பாலும் வைகாசி, ஆனி) மாதங்களில் பூரணைநிலாநாட்களில் நீரினடியிலிருந்து சத்தமிடுகின்றன வென் றும் அநுபவம்வாய்ந்த வாவிமீன்பிடிகாரர் கூறுகின்றனர்.

நீருள் வாழ் செந்துவின் ஒலியாதலால், அதிகம் ஆராய்ச்சியின்றி மேனாட்டார் இதனை மீனெனக்கருதினர் என்றே அடிகள் அன்னார் கூற்றை ஏற்க முற்றாக மறுக்கின்றனர் எனலாம். இவ் வூரிப்பாட்டு கீர்த்தனங்களாகவன்றித் தனித்தனிச் சுரங்களாகவே கேட்கின்றது. பல்வேறு தனி ஓசைகளாக இவ்வொலி கேட்கப்பட்டபோதிலும் ஊரிகளின் முரற்சியில் ஒரு இனிய பொருத்தம் இருப்பதை இசையறிவாளர் காணலாம். அடுத்தடுத்துக் கேட்கப்படும் சுரங்கள் தொடர்ந்து ஒன்றுக்கொன்று பொருந்த இசைப்பனவாகவே இருக்கின்றன. மிக அநேகமான சுரவொலிகள் கேட்கப்படும்போதும் ஒன்றேனும் அவச்சுரம்படாமை அதிசயிக்கத் தக்கதொன்றாகும். எடுத்தும் படுத்தும் நலிந்தும் கேட்கப்படும் ஏழுசுரங்களையும் அடிகள் கோத்து அரமகளிர்பாடிய இன்னிசைப்பாடலாக்கி நமக்குக் காட்டினர்:—

நீநி - சாச - ரீ = நீல - வானி - லே
நிசரி - காக - மா = நிலவு - வீச - வே
மாம - பாப - தா = மாலை - வேளை - யே
மபத நீநி - சா = மலைவு தீரு - வோம்
சாச - ரீரி - கா = சால - நாடி - யே
சரிக - மாம - பா = சலதி - நீரு - ளே
பாப - தாத - நீ = பாலை - பாடி - யே
பதநி - சாச - ரீ = பலரோ - டாடு - வோம்.

சுரங்களுக்கேற்ப எழுதப்பெற்றுள்ள பாடற்பகுதியை ஒன்று சேர்க்க, மேலேகண்ட செய்யுளாவது காணலாம்

அப்பால், இசைப்பிறப்புமுறையை விளக்குவதாகவுள்ள கடைசிப்பாகச் செய்யுளை நோக்குவோம். "ஐந்தாம் நரம்பின் அமைதியினை யானறிந்தேன் ... ... நின்ற முறையை நினையின் இவை கிளையாம்" எனும் பகுதியுள் அடிகள் கூறும் இசையின் பிறப்புவரலாற்றைச் சுரங்களின் ஒழுங்கின்படி விளக்கிக்காட்டுதும்.) சுரங்களினருகே எம்மால் இடப்பெற்றுள்ள இலக்கங்களை இப்போது கவனிக்கவேண்டியதில்லை.)

ச - சட்ஜம் 4
ரி - ரிஷபம் 6
க - காந்தாரம் 1
ம - மத்திமம் 3
ப - பஞ்சமம் 5
த - தைவதம் 7
நி - நிஷாதம் 2

இவை சுர ஒழுங்கு.

'காந்தாரத்தைந்தாய்க் கனிந்த நிஷாதமெழும்' என்ற அடியின் பொருள். காந்தாரம் என்னும் சுரத்துக்கு நிஷாதம் ஐந்தாம் சுரம் (நரம்பு) ஆகும் என்பதாம். இப்படியே மற்றைய அடிகளுக்கும் பொருள்கொண்டால் மேலே போட்டுக்காட்டப்பட்ட இலக்கஒழுங் கின்படி காந்தாரம், நிஷாதம், மத்திமம், சட்ஜம், பஞ்சமம், ரிஷபம், தைவதம் என்ற முறையில் சுரங்கள் அமைவதைக் காணலாம். 'சட்ஜத்தின் பஞ்சமமே பஞ்சமமாம்' என்பதற்கு சட்ஜம் எனும் நரம்பின் ஐந்தாம் நரம்பே பஞ்சமம் எனும் நரம்பு என்று பொருள். இசைநரம்பு ஒவ்வொன்றுக்கும் அதன் ஐந்தாம்நரம்பு கிளைநரம் பாகும் என்பது பண்டை இசைநூன்முடிபு. கிளை, இனம், உறவு, சந்ததி என்பன ஒருபொருட்சொற்கள். இதன்படி நோக்கினுல் யாம் பின்னர்க்கண்ட ஒழுங்கு கிளையொழுங்காகும் என்பது புல னுகும். இசை ஒன்றிலிருந்து ஒன்று கிளைத்துவந்தது என்றும், அவ் வாறு கிளைத்த ஒழுங்கே இது என்றும் கூறுவதே "நின்ற முறை யை நினையின் இவை கிளையாம்" எனும் அடிப்பொருளாகும்.

முந்தையோர் ஏழு இசைகளாகக்கொண்டதைப் பிற்காலத்தி னர் எழுசுரங்களாகக் கொண்டார்கள். சுரங்கள் பின்வருமாறு இசைப்பெயருறும்:—

க - காந்தாரம் = தாரம்;	நி - நிஷாதம் = உழை;
ம - மத்திமம் = குரல்;	ச - சட்ஜம் = இளி;
ப - பஞ்சமம் = துத்தம்;	ரி - ரிஷபம் = விளரி,
த - தைவதம் = கைக்கிளை;	

சிலப்பதிகாரத்து இசைபற்றிவரும் பகுதிகளுளெல்லாம் இசைப்பிறப்புமுறை இங்குக் கண்ட தாரம், உழை, குரல், இளி, துத்தம், விளரி, கைக்கிளை என்னும் ஒழுங்கின்படியே கூறப்பட்டுள்ளது. இதனையே, ஏழிசையாகிய எழுவராமகளிரும் கூறிய தாக:—

"புலியி லெனைத் தாரமென் பாள் ... ...
... ...
உய்த்த விளரிக் குறுதநயை கைக்கிளையே"

எனும் அடிகளில் யாழ்நூற்புலவர் கூறியுள்ளனர். மேலே நாம் காட்டியபொருளை அறிந்துகொண்டால் பாடல் முழுவதும் தெள்ளிதிற் பொருள்புலப்பட்டுநிற்பது காணலாம்.

இசைகளுடன் பொருந்தி நவரசங்களும் வருமாறு யாழ் நூலுள் நன்கு விளக்கப்பெற்றுள்ளது. கலிப்பாவாலான மேற்போந்த செய்யுளுள், தரவிலும் தாழிசைகளிலும் வந்துள்ள வருணனைகளும், அவற்றுக்காக அடிகள் எடுத்தாண்ட செஞ்சொற்களும் மிக இனிமைபயந்து, அவருடைய கவிதாசக்தியின் பெருமையை நமக்குக் காட்டுகின்றன. இந்த ஊரிப்பாடலை ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கானோர் கேட்டுச்செல்கின்றனர். 'இவ்விசையில் என்ன விசேஷம் இருக்கின்றது! இதற்கேன் இவ்வளவு முக்கியத்துவம் வந்தது!' என்று பேசிச்செல்வோரும் உளர். ஆனால் அடிகளுக்கோ, அவருடைய இசைநூற்புலமையாலும், நுண்கணிதப் பேரறிவாலும், தமிழர் தவப்பயனாலும் இவ்விசை பெரிய கிளர்ச்சியைச்செய்து அவரை இசையாராய்ச்சிசெய்யத் தூண்டுவதாயிற்று. கவிஞனுடனும் ஓவியக்காரனுடனும் உயிரற்றுக்கிடக்கும் சிறுகற்களும்கூடப் பேசுகின்றன என்றால் அடிகளுடன் இந்த ஊரியிசை உருப்பெற்றுப் பேசியதில் வியப்பென்ன இருக்கின்றது!

திராவிடமொழிகளின் உறவு*

மதுரை வழக்கறிஞர் ஸ்ரீ. N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள் B.A., B L.

1 திராவிடமொழிகளின் பொதுவான தோற்றவாயும் அவைகளுள் ஒன்றற்கு மற்றொன்றோடுள்ள தொடர்பும் இக் கட்டுரையின் பொருளாகும்.

2 திராவிடமொழிகள் என்று பொதுவாக வழங்குவன தமிழ், வடுகு, கன்னடம், மலையாளம் என்னும் நான்குமொழிகளுமாம். இவற்றுள் தமிழே மிகப் பழமையும் தலைமையும் உடையது என்பதும், அதிலிருந்துண்டாகி வடுகு வெகுகாலத்துக்குமுன்னரே பிரிந்தமொழியாயிற்று என்பதும், தமிழும் வடுகும் கலந்து கன்னடமானதும், மலையாளம் சில நூற்றாண்டுகளுக்குமுன்னரே பிரிந்த ஒரு தனிமொழியெனக் கருதப்படுவதும் இம்மொழிகளை ஆராய்வதால் நன்குவிளங்குவனவாம்.

3 இன்றும் தமிழின் சிதைவுகளாகக் காணப்படும் மொழிகள் பலவுள. இந்தியாவின் வடமேற்கில் பலுசிஸ்தானத்தில் பேசப்படும் பலுச்சியும், ஆசியாவின் மேல்கோடியில் பாலஸ்தீனத்தில் பேசப்படும் ஹீப்ருவும், அதற்கும் மேற்கே எகிப்தில் பேசப்படும் அமெரிக் முதலிய பாஷைகளும், கிழக்கே மலாய்நாட்டிலும் அதையடுத்துள்ள பலவேறுதீவுகளிலும் பேசப்பெறும் மொழிகளும், அரபி முதலிய இன்னும் சிலமொழிகளும் தமிழ்மொழியின் சிதைவுகளாகவே கருதப்படுகின்றன.

4 மேலும், கன்னடதேசத்தின் ஒரு பாகத்தில் அதன் சிதைவாகிய துளு என்னும் மொழி உளது. நீலகிரிமலையின் பல பாகங்களிலுமுள்ள இருளர், படகர், தோடர், கோட்டர், குறும்பர் எனும்

---

* இக் கட்டுரை, 5—5—49 ல் திருச்சிராப்பள்ளி அகில இந்திய வானொலிநிலையத்திலிருந்து ஒலிபரப்பப்பட்டது; அவ்வானொலிநிலையத்தார் அநுமதிபெற்று வெளியிடப்பட்டது.

ஐந்துவகுப்பினர்கள் சிறிது வேறுபாடுள்ள மொழிகளும் பேசுகிறார்கள். நீலகிரிக்குச் சுற்றுப்புறங்களில் தமிழ், மலையாளம், கன்னடம் வழங்கும் தேசங்கள் இருப்பதால் இவர்கள் பேசும் மொழிகளும் இம்மொழிகளின் சிதைவாகவே இருக்கின்றன. ஆயினும், நாம் இங்கே ஆராய எடுத்துக்கொண்டது வடுகு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பேயாம்.

5 தொல்காப்பியம் முதலிய நூல்களில் வடவேங்கடம் தென்குமரிகளைத் தமிழ்கூறுநல்லுகத்தெல்லையாகக் குறிப்பிட்டது, தொல்காப்பிய இலக்கணமும் அதன் இலக்கணவரம்பைபொட்டி எழுந்த நூல்களும் வழங்கும் நாட்டெல்லையேயாம். சங்ககாலத்து நூல்களிலும் வடுகம் தெலுங்கம் என்று வேங்கடத்துக்கு வடக்கேயுள்ள நாடுகளுக்குப் பெயர் வழங்கலாலும், வடுகு வெகுகாலத்துக்குமுன்பே தான் தனிமொழியாகித் திகழலுற்றது விளங்கும். குடக்கேயுள்ள நாட்டுக்கு 'குடகு' என்பது போல வடக்கேயுள்ள நாட்டுக்கும் மொழிக்கும் "வடகு" என்று தமிழர் இட்டபெயர் 'வடுகு' எனத் திரிந்துவழங்குகிறது. மைசூரின் வடக்கிலும், பெல்லாரி, அனந்தப்பூர் ஜில்லாக்களின் தெற்கிலும் மேற்கிலும் உள்ள நாட்டுக்கு படகநாடென்றும், அங்குள்ள மக்களுக்குப் 'படகவாரு' 'படகநாட்டிவாரு' என்றும் பெயர்கள் வழங்குவதும், இன்னும் இந்நாட்டாரே அடுத்துள்ள நீலகிரியில் குடியேறிப் படகர் என்னும் பெயரோடு அத்தேயத்துமக்களால் வந்தேறிகளாக மதிக்கப்பெற்று வாழ்ந்துவருகிறார்கள் என்பதும் நோக்கத்தகும். 'படகம்' என்பது 'வடகம்' என்பதின் முதலெழுத்துமாற்றமேயாம். இதுபோலத் தமிழரை வடுகர் அரவவாடு என்று அழைப்பதும், அருகநாடு வடுகநாட்டையொட்டித் தெற்கிலுள்ளநாடு ஆதலாலும் அந்நாட்டு மொழியை அருவம் என்று வடுகர் வழங்கியதாலுமாம். இம்மொழிபேசுபவர் 'அருவர்' என்னப்பட்டார்.

கலிங்கத்துப்பரணியில் வரும்,

'அருவ ரருவ ரென விறைஞ்சினர்
அபய மபய மென நடுக்கியே' (போர்பாடியது. 49)

'ஒருவரொருவர்மேல் விழுந்து வடநாடர்
அருவரருவரென அஞ்சி'

என்பனவும் நோக்கத்தக்கவை.

வடுகில் பல பெருநூல்களும் சொற்பொருள்கூறும் நிகண்டும் இலக்கணங்களும் வெகுநாளாக இருந்துவருவதும் இம்மொழி நெடுங்காலமாய்த் தனிச்சிறப்படைந்துவிளங்குவதற்குச் சான்றாகும். இப்போது அவர்கள் ஒரு பெருங் கலைக்களஞ்சியம் ஆக்கி வெளியிட்டிருப்பதும், அவர்கள் மொழிப்பற்றையும் கல்வி வளர்ச்சியிலுள்ள ஊக்கத்தையும் குறிக்கும்.

6 இனி, கன்னடபாஷை பேசுகிறவர்களைக் கருநாடியர் என்று ஜயங்கொண்டார் கூறி,

'மழலைக்குறு மொழியிற்சில வடுகும்பல தமிழும்
குழறித்தரு கருநாடியர் குறுகிக்கடை திறமின்'

என்று பாடுகிறார். மைசூரும் அதைச்சுற்றியுள்ள நாடுகளும் கர்நாடதேசமென்னும் பெயருடைத்தாதலின் அந்நாட்டின்பெயரே அங்குப் பேசும் மொழிக்காயிற்று இவர்மொழி பேசிச் சிதைவுற்ற தமிழோடு அடுத்த கிழக்கேயுள்ள வடுகுச்சொற்களையும் இசைத்த தாகிய ஒருமொழியாகும். ஜயங்கொண்டார் கலிங்கத்துப்பரணி பாடிய கி. பி. பதினொன்றா நூற்றாண்டில் இவர்பேச்சுச் சில வடுகும் பலதமிழும் குழறித்தருபேச்சானது, அதற்குச் சிலகாலத்துக்கு முன்னமே இது ஒரு தனிமொழியாகும் முயற்சியில் இருந்துளதென் பதைக் காட்டுகிறது. இனிக் கருநாடர் என்னும் சொல் அத்தேயத் தவரைக்குறித்துப் பல பழந்தமிழ்நூல்களில் உளதாயினும், அவர் தமிழினும் வேறுபட்ட தனிமொழியுடையவராயிருந்தது அதனினின்று புலப்படவில்லை. அவர்மொழியும் தமிழின் சிதை வாகவே இருந்திருக்கிறது என்பது இப்போதைய கன்னடமொழி யாராய்ச்சியாளர் அதை ஹளகன்னடம் (பழையகன்னடம்) என்று ஒதுக்கிவிட்டுச் சுமார் கி.பி. ஒன்பது பத்தாவது நூற்றாண்டுமுதலே இப்போதைய கன்னடத்தின் ஆரம்பகாலம் என நினைப்பதினாலும்

இம்மொழி சுமார் பத்து நூற்றாண்டுகளுக்குள் தமிழ் தெலுங்குகளின் சேர்க்கையால் உருவெடுத்ததென்னலாம்.

7 இனி மலையாளத்தை நோக்கின் அது இன்றும் தமிழென்பதே மொழியாராய்ச்சியாளர் துணிபு. இப்பொழுது மலையாளமென்பது தமிழ்நாடுகள் மூன்றனுள் சேரநாடு. இளங்கோவடிகள் அந்நாட்டு அரசர்மரபில் தோன்றிச் சிலப்பதிகாரத்தைத் தமிழில் ஆக்கித்தந்தவர். இன்னும் சங்கநூல்களில் ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து முதலியவை மலையாளம் தமிழ்வழங்கும்நாடென்பதையே காட்டுகின்றன. தமிழ்மொழிக்குப் புறப்பொருளிலக்கணநூலியற்றிய ஐயன் ஆரிதனாரும் இச்சேரநாட்டவரே. கி.பி. 7, 8 நூற்றாண்டுகளில் விளங்கிய சேரமான்பெருமாள்நாயனார், குலசேகராழ்வார் முதலியோரும் பெருந்தமிழ்வல்லார்கள். பிற்காலத்திற் கம்பர் பாடிய ராமாயணத்திலும்,

'வடகலை தென்கலை வடுகு கன்னடம்
இடமுள பாடையா தொன்றி னாயினும்'

எனக் கூறுதலான், கம்பர்காலம் என்று மதிக்கிற 10, 11 நூற்றாண்டுகளிலும் மலையாளம் தமிழ்நாடாகவே இருந்துவந்திருக்கிறது என்பது தெளிவாகிறது. ஆனாலும், மலையாளநாடுகளில் வாழ்ந்தவர்கள் தமிழின் ஒரு சிதைவாகிய பேசித்திரிந்த மொழியொன்றை நெடுநாளாகப் பேசிவந்திருக்கிறார்கள் என்பதையும் சரித்திரச்சான்றுகள் பல குறிப்பிடுகின்றன. இவர்கள் பேச்சுமுறையில் வல்லினஎழுத்துக்களை மெல்லினமாக்குவதும், 'உ' என்னும் மொழிமுதலாகவரும் உயிரை 'ஒ' ஆக்குவதும், மெய்ம்மேலேறிவரும் 'உ'வை 'இ' ஆக்குவதும், இவைபோன்ற பிறபல வேறுபாடுகளும் கேட்போர்யாவர்க்கும் நன்குவிளங்குவன. இம்மொழி பேசும்மொழியாய் வெகுகாலமாயிருக்க இந்நாட்டிலும் கல்வியாளர் கற்றுக் கையாண்டுவந்தது சங்கத்தமிழேயாம். இப்பேசும் மொழியில் நூல் இயற்றி அந்நாட்டாருக்கு முதன்முதல் உதவியவர் கண்ணஸ்ஸப்பணிக்கர். அவர் செய்த ராமாயணம் கி. பி. 1350-ல் எழுதப்பெற்றதென்பர். இது சிலசில வடமொழிப்பதங்கள் விரவிவர மலையாளிகள் பேசும் தமிழில் அமைந்துள்ளது. இதன்பின் செருஸ்ஸரிநம்பூரி கி.பி.1550ல் எழுதியுள்ள கிருஷ்ணப்பாட்டும் கி.பி.

1750ல்உன்ஞய்வாரியர் செய்துள்ள களசரித்ரமும் இவ்வகையே வடமொழிச்சொற்களைக் கொஞ்சம் கூடக்குறையக் கொண்டமைந்துள்ளன. இம்மொழிக்கு இன்னும் தக்க நிகண்டும் இலக்கணமும் உண்டாகவேண்டியிருக்கிறது. இம்மொழியின்பால் மிக்க அன்பும் ஆர்வமும் கொண்டு இதற்கு ஒரு இலக்கணமும் நிகண்டும் வகுத்து அமைக்க முயன்றுள்ள டாக்டர் எச். குண்டார்ட் என்பவரே இதற்குத் திவாகரரும் அகஸ்தியரும் ஆவரென்று ஒரு பெரிய மொழியாராய்ச்சியாளர் பேசுகிறூர். ஆதலின் இதற்குத் தமிழோடு எந்நாளும் தொடர்பு அறுது. இது தமிழின் ஒரு சிதைந்தமொழியாகவே உளதாகும், இம்மொழியில் வடமொழிச்சொற்கள் கூடியவரை சிதைவு திரிபு இன்றிக் காணப்படுதலின் அவைகளை ஒதுக்கி மீதச்சொற்களை மேலே சொன்னவைபோன்ற சில சுருக்கமான விதிகளைக்கொண்டு ஆராய்ந்தால் அவை தமிழ்ச்சொற்களாகவே உள்ளன. ஆதலின் மலையாளத்தைத் தமிழினின்றுதோன்றிய வேறொருமொழி என்னுது நெடுங்காலமாகப்பேசும் முறையில் சிறிது திரிந்துள்ள தமிழென்பதே மொழிநூலாளர் நேர்ந்த முடிவாகும்.

8 இனி இந் நான்குமொழிகளும் திராவிடமொழிகளேயாம் என்பதற்கு உள்ள ஆதாரங்களை ஆராய்வோம். உலகத்தில் பெரும்பான்மைமொழிகளாக 500 மொழிகள் உள்ளன எனக் கணக்கிட்டு அவைகளை நான்கு பெருங்கூறுகளாக மொழிநூலார் வகுத்துள்ளார்கள்.

முதலாவது:—தனிச்சொல்மொழி. இவை சீனம் முதலிய மொழிகள். இவைகளின் சொல் எப்பொழுதும் மாறுதலடையாது. திணை, பால்கள், வேற்றுமைகள், காலம் எல்லாம் வேறுவேறு சொல்லைக்கூட்டுதலால் ஆகும். உதாரணமாக: நன்=ஆண்; நியு=பெண்; ட்ஸி=மகவு. ஆதலின் நன்ட்ஸி=மகன். நியுட்ஸி=மகள்.

இரண்டாவது:—உருபு விகுதி முதலியவற்றுல் இயையும் மொழிகள். தமிழும் அதைச்சேர்ந்த மேற்கூறிய மூன்று இன மொழிகளும் இந்த வகுப்பில் சேருவன. மகவு எனும் பொதுச்சொல் உருபால் உயர்திணை ஆண்பால் பெண்பால்களை மகன், மகள்

MAHAMAHOPADHYAYA

என உணர்த்திற்று; மக எனும் பொதுச்சொல் விகுதிகள் பெற்று உணர்த்துகிறது.

மூன்ருவது: சொற்றிரிமொழிகள். இவற்றுள் வடமொழி அடங்கும். தசரதன்மகன் தாசரதி என்றும் ஜனகன்மகள் ஜானகி என்றும் வியாகரணவித்வான் வையாகரணி என்றும் ப்ரதானமான சொல் தன்னுருவத்தையே மாற்றிக்கொள்ளும்.

நான்காவது: பலசொற்கள்கூடி வாக்கியமாகுங்கால் முக்கியமான ஒலிகள்நின்று மற்றவைகெட்டு ஒவ்வொரு வாக்யமும் ஒரு நெடுஞ்சொல்லைப்போற் காணப்படுதல். நதொலிநீன் - நீ படகை என்னிடம் கொண்டுவா என்பது போல்வன.

இப்பொழுது நாம் ஆராயும் தமிழ்முதலான நான்குமொழிகளும் இரண்டாவதுவர்க்கத்தைச்சேர்ந்தவை. இவைகளில் மூன்ருவதுவர்க்கத்தைச் சேர்ந்தவையாகத்தோற்றும் சொற்களெல்லாம் வடமொழிச்சொற்களாகவோ அல்லது தமிழடியாகவந்த சொற்களுக்கு வடமொழியுருவமைத்து மாற்றியனவாகவோ இருப்பனவேயன்றி வேறில்லை.

9 மொழிகளின் தொடர்புக்கு அவைகளின் எழுத்தமைதி நல்ல சான்ருகும். தொல்காப்பியத்துக்குமுந்தியகாலமுதல் கி. பி. எட்டாவது நூற்ருண்டின் இறுதிவரை வட்டெழுத்தே தமிழெழுத்தாய் இருந்திருக்கிறது. அதை வடுகு, கன்னடம், மலையாளம் இவைகளின் எழுத்துக்களுடன் ஒப்புநோக்கின் இவைகளும் தமிழர் வடமொழியை எழுதும் க்ரந்தமும் எல்லாம் வட்டெழுத்தடியாகவே எழுந்தன என்பதும், இப்போதைய தமிழெழுத்தும் வட்டெழுத்துக்களின் வளைவுகளை ஒருவாறு நீக்கி, நெடுக்கிலும் குறுக்கிலும் கோடுகள் இழுத்தமைந்தவை யென்பதும் ஆராய்ந்தால் புலனுகும். இதனுலும் இந்த 4 மொழிகளும் திராவிடவகுப்பின என்பதும் தெளிவாகும். குறுகிய கால அளவில் சொல்லியுள்ள இதை மொழிவல்லுநர் ஆராய்ச்சிகள்நிரம்பிய நூல்களிற் பரக்கக் காணலாகும்.

ஸ்ரீ:

உவவனம் *

[ஸ்ரீ N. S. தாத்தாசாரியரவர்கள், சிரோமணி, ஆசிரியர், K. H. ஸ்கூல், தஞ்சை.]

I முன்னுரை.

தெற்கெல்லையில் நீலக்கடலோரத்திலே தவம்புரியும் ஒரு கன்னித்தெய்வம்; வடக்கெல்லையில் திருவேங்கடமாமலையிலே ஒரு கருணைமாமுகில்; இடையே பரந்த பைந்தமிழ்ச்சோலையாகும் நம் தமிழ்நாடு. இது இந்தியத்தாயின் ஒப்புயர்வற்ற ஓர் உவவனம்; சங்கப்புலவர்களாம் அருங்குயில்கள் தமிழிசைபாடிய உவவனம்; மனிதப்பண்பாம் நறுமண மகரந்தத்தை நானிலமனைத்தும் பரப்பிய உவவனம். இந்தத் தமிழ்ச்சோலையே நம் உறைவிடம். சோலையிலே சற்று அயர்ந்திருக்கிறோம். மனக்கண் விழிப்போம். 1800 ஆண்டுகளுக்குமுன்பு மனக்கண்ணைச் செலுத்துவோம். இம் மாநிலத்தில் நம்மிலும் நலமிக்காருண்டோ! அக்காலம் சங்க காலம்; அதுவே பொற்காலம். செம்பியன் செழியன் குட்டுவன் இவர்களைச் சற்று நினைப்போம். அப்பொழுது அறிவு திரு ஆற்றல் என்ற மூன்றும் நம் மனக்கண்முன் காட்சியளிக்கும். அக்கால நிலையை முழுதும் அறியக் கல்வெட்டுக்களோ பழையசரித்திரச் சான்றுகளோ உதவிசெய்யவில்லை. கடவுளருளால் எஞ்சியிருக்குஞ் சங்கநூல்களும் ஐம்பெருங்காப்பியங்களும் மற்றும் பல பழைய நூல்களும் அக்காலநிலையை அறியத் துணையாக இருக்கின்றன; பாணர்பாடிய பாக்கள் பெரிதும் உதவுகின்றன. அப் பண்டைய நூல்களிலிருந்து பண்டைய உவவனங்களைப்பற்றிச் சிறிது கூறுவோம்.

---

* இது, திருச்சிராப்பள்ளி வானொலிநிலையத்திலிருந்து 23-6-49ல் ஒலிபரப்பப்பட்டது. அவ்வானொலிநிலையத்தார நுமதிபெற்று வெளியிடலாயிற்று.

II அமைப்பு

மக்கள் வாழும் நிலப்பகுதியை மக்கள் நெருக்கத்திற்கும் நிலப் பரப்பிற்கும் தக்கவாறு நாடு நகரம் கிராமம் எனப் பிரித்துவழங்கு கிறோம். அவ்விதமே மரம் செடி கொடிகளின் நெருக்கத்திற்கும் நிலப்பரப்பிற்கும் ஏற்றவாறு பிரித்துக் காடு தோப்பு உவவனம் எனக் கூறலாம். பொதுவாக இயற்கையில் தோன்றுவது காடு. செயற்கையால் தோன்றுவது தோப்பும் உவவனமும். இவை ஒவ்வொருதுறையிலும் நகரத்திற்கு அணியாகவும் அரணாகவும் இருக்கின்றன.

> "மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
> காடும் உடையது அரண்"

என்பது தமிழ்மறை. புறநானூற்றில், ஐயூர்-மூலங்கிழார் என்ற புலவர் தற்காலத்துக் காளையார்கோயிலைக் கானப்பேரெயில் என்று கூறுகிறார். காட்டையே பெரிய அரணாகக்கொண்டது என்பது இதன் பொருள். "காவற்காடு", "கடிமிளை" எனச் சங்கநூல்கள் இதை வழங்குகின்றன.

மூவேந்தர் தலைநகரமாகிய புகார், கூடல்மதுரை, வஞ்சி முத லிய நகரங்களைப்பற்றிக் கூறுமிடங்களில் பழைய நூலாசிரியர்கள் நகரின் புறத்தே காவற்சோலையையோ காட்டையோ கூறாது விட்டிலர். முற்காலத்து நகரங்களின்புறத்தே காடும், காவல்மதில் களையொட்டிச் சோலைகளும் இருந்தன. சோலைக்குப்பின் மீன் உப்பு பிட்டு அப்பம் முதலியவை விற்பார்தெருக்கள் இருந்தன. அவற்றையடுத்து அமைச்சர் முதலிய அதிகாரிகள் வாழும் தெருக் கள் அமைந்திருந்தன. அகன்ற தெருக்களும் முச்சந்திகளும் சோலைகளும் இருந்தன. நகரின் நடுவே பொன்மலைபோல் அரண் மனை திகழ்ந்தது. அரண்மனைக்குள்ளே சோலைகளும் அத்தாணி மண்டபம் மணியரங்கு முதலியவைகளும் விளங்கின.

உவவனம்: இதை உய்யானம், சோலை, பொழில் எனப் பல சொல்லால் வழங்கலாம். உவவனம் இயற்கையின் குழந்தை. இயற்கை இறைவனுடைய உடல். இயற்கை புலவருக்கு ஒரு வஸந்தமாலை. புலமைக்கு ஒரு தென்றல். இயற்கையின்றேல்புலவர் இல்லை; புலமை இல்லை; புலவரும் புலமையும் இன்றேல் இயற்கையேது? இயற்கையைக் கூறி இறைவனைக் காட்டினார்கள். அன்பையும் ஆக்கத்தையும் நுண்ணறிவையும் உணர்வையும் வளர்த்தார்கள். 7-ஆம் நூற்றூண்டில் மாநிலமுய்ய வந்துதோன்றிய மண்மகளாம் ஆண்டாள், 'கருவிளையொண்மலர்காள்! காயாமலர்காள்! திருமால் உருவொளி காட்டுகின்றீர்' என்கிறாள். அவள் மணிவண்ணன் கண்ணனை மலர்களினிடத்தே காட்டுகிறாள். இவ்வாறே நம் பழம்புலவர்கள் இயற்கையின்வாயிலாக உண்மையை வெளியிடும் அருமை சொற்களால் அளவுகாணமுடியாதது. சோலைநிறைந்த நாடு நன்னாடு; வளமிக்கநாடு. 'மணிமேகலை', 'சிலப்பதிகாரம்,' 'சிந்தாமணி', 'சூளாமணி' முதலிய நூல்களில் இயற்கையையும் சோலையையும் வருணிக்கும்வாயிலாக ஆசிரியர்கள் தம் நூல்களுக்கு அழியா மெருகுபூசியிருக்கிறார்கள். அதிகமேன்? நகரத்தை நகரமாக்கியவை சோலைகளும் தோப்புக்களுமே. இளங்கோவடிகள் காவிரிப்பூம்பட்டினத்தைப்பற்றிக் கூறுமிடத்து,

"வயலும் சோலையும் அல்லது யாங்கணும்
அயல்படக் கிடந்த நெறி ஆங்கில்லை"

என்றார். 'எவ்விடத்திலும் வயல்களும் சோலையுமில்லாது வேறுபட்டவழி அவ்விடத்தில் இல்லை' என்பது இதன் பொருள். அடிகள் ஊர்காண்காதையில் நகரப்பெண்டிரைப் பூவும் பொய்கையும் இனிமையும் தங்கிய உவவனமாகவே கூறியிருக்கிறார்.

முன்பு அரண்மனைக்கு உள்ளும் புறமும் சோலைகள் இருந்தன. புறத்தே உள்ளவை பொதுமக்கள் தங்கிக் களிக்கக்கூடியவை. மணிமேகலை புதுமலர்கொய்ய மலர்வனம்புகப் புறப்படும்பொழுது

அவளுடைய தோழி சுதமதி, புகாரில் "இலவந்திகை", "உய்யானம்", "சம்பாதிவனம்", "உவவனம்" என நான்குசோலைகள் நகரின் நடுவே உள்ளனவென்று கூறுகிறாள். சோலைகளிலே பொய்கைகள் இருந்தன. சோலைகள் அகன்றும் சற்று நீண்டும் இருந்தன. பாலையொழிந்த குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நிலங்களிலெல்லாம் சோலைகள் இருந்தன. சோலைப்பொய்கைகளிற் கயல்கள் துள்ளி விளையாடின. சோலைகளிலே கனி உதிரும் நிழலடர்ந்த மரங்களும் நிறைந்திருந்தன; கதிரவன் கடும் ஒளி அங்குப் புகாவண்ணம் செறிந்திருந்தது.

"பரிதியஞ் செல்வன் விரிகதிர்த் தானைக்கு
இருள்வளைப் புண்ட மருள்படு பூம்பொழில்"

என்பது மணிமேகலை. சோலைகளில் அசைந்தாடும் தோகைமயில்களும், குழலிசைக்குயில்களும், கனி கழலாடும் மந்திகளும், அடிநடைபழகும் அன்னப்பறவைகளும், பண்மொழிபேசும் பசுங்கிளிகளும் சோலையை அழகுறச்செய்தன.

புகாரில் மருவூர்ப்பாக்கத்திற்கும் பட்டினப்பாக்கத்திற்கும் இடையே ஒரு பெரிய சோலை இருந்தது; அதில் நாளங்காடி என்ற பகற்கடைத்தெருவும் இருந்தது என ஆசிரியர் இளங்கோவடிகள் கூறுகிறார்.

'இருபாற் பகுதியின் இடைநில மாகிய
கடைகால் யாத்த மிடைமரச் சோலை
கொடுப்போர் ஓதையும் கொள்வோர் ஓதையும்
நடுக்கின்றி நிலைஇய நாளங் காடி'

என்பது சிலப்பதிகாரம். தொடுகழற்கிள்ளியின் தம்பியாகிய 'இளங்கிள்ளி' அமைத்த புத்தர்கோயில் காஞ்சிமாநகரத்தில் ஒரு சோலையின் நடுவே இருந்தது.

"செம்பொன் மாச்சினைத் திருமணிப் பாசடைப்
பைம்பூம் போதிப் பகவற் கியற்றிய
சேதியம் தொழுது"

எனச் சாத்தனார் கூறுகிறார். புகாரில் மணிமேகலை மலர்கொய்யச் சென்ற உவவனத்தில் உள்ள பளிக்கறையில் புத்தருடைய பாத பீடிகை இருந்தது. 'மணியறைப் பீடிகை வலங்கொண்டு' என்பது மணிமேகலை. ஆகவே முன்பு சோலைகளில் தொழுமிடங்களும் அமைந்திருந்தமை விளங்குகிறது. சிந்தாமணியில் ஒரே சோலையில் ஆறுபருவங்களையும் ஜீவகன் நுகர்ந்தானென்று ஆசிரியர் திருத்தக்கதேவர் கூறுகிறார்.

இனிச் சோலைகளைப் பழைய நூல்களில் வருணித்திருப்பதைக் கூறுவோம்.

III வருணனை

பொருள்களைக் காண்டலும், கண்டவற்றை உள்ளவாறு உணர்தலும், உணர்ந்ததைச் சிதையாதுரைப்பதும், உரைத்ததைப் படிப்போர் கேட்போர் மனதிற் பதியவைப்பதும் எளிதன்று. அதற்குக் கல்வியும் கற்பனையும் மட்டும் போதா. அருளும் தெருளும் கனிந்தநெஞ்சமும் முதிர்ந்த ஆர்வமும் வேண்டும். இவை யாவும் ஒருங்கே அமையப்பெற்றவர்கள் நம் பழந்தமிழ்ப்புலவர்கள். இவர்கள் வருணனையைப் படிக்குங்காற் சொல்லினிமை, கருத்தமைதி, நடையழகு, அணியாக்கம், தத்துவத்தகைமை யாவும் நம்மைச் சூழ்ந்து மணமலரை வண்டுகள்போல் மொய்த்துக்கொள்கின்றன.

மணிமேகலை புகுந்த உவவனத்தில் இருளடர்ந்த பூஞ்சோலையெங்கும் பலநிற மலர்கள் திசையெங்கும் நறுமணம் வீசுகின்றன. குழலூதும் தும்பிகள் பறக்கின்றன. யாழிசைக்கும் மழலைவண்டுகள் பரவியிருக்கின்றன. இதை ஆசிரியர் சாத்தனார் ஒரு நடனமேடையாக்கினார். நடிகர்கள் வேண்டாமா! தோகைவிரித்தாடும் மயில்களே நடிகர்கள். குயில்களின் இன்னிசையே நடனஇசையாயிற்று. மரத்திலும் தரையிலும் தங்கிய மந்திகளே நடனத்தைக் காண்போர்கள். பளிங்குபோன்ற நீரோடையே மேடை,

பொய்கையிற் பூத்த செந்தாமரைமலர்களே பொற்பீடம். பீடத்தில் தன் பேடையோடு அமர்ந்திருக்கும் அன்னச்சேவலே விழாத்தலைவன். சம்பங்கோழிக்குரலே குழலொலி என வருணிக்கிறார். அச்சோலை அழிந்து ஆயிரவருடங்களாகியும் இவர் கவி அதை நித்தமும் புதுப்பித்துக்காட்டிப் பொலிகிறது. பழஞ்சோலையைப் பன்மடங்கு அழகுபெறச்செய்து நம் கண்முன்பே காட்டுகிறார்.

மேலும், அவர் அவ்வுவவனத்தில் வெண்சுரபுன்னை, செம்முல்லை, தாழை, அசோகம், சண்பகம், இலவு: இவை யாவும் வித்தகர் அமைத்த சித்திரவேலைப்பாடமைந்த பச்சைத்துகில் போர்த்ததுபோல் இருக்கிறது என்கிறார். இவ்விடத்திற் சோலையை ஒரு பெண்ணாகவும் நறுமலர்ச்செறிவை அப்பெண் போர்த்த துகிலாகவும் கூறியது வாக்கின் எல்லையைக் கடந்ததன்றோ? கண்களுக்கும் உள்ளத்திற்கும் சொல்லிற்கும் இன்பம்பயக்கும் பெண்ணைப்போல இவ்வுவனத்தை வழங்கினார். துகில் போர்த்ததுபோல் என்று கூறித் தமிழ்மங்கையின் நாணம், அச்சம், மடம், பயிர்ப்பு என்ற பெண்மைமாட்சியை வெளியிட்டார்போலும்.

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் பொய்கைக்கரையிலே தழைத்துவளர்ந்திருக்கும் தாழையிலிருந்து மகரந்தம் உதிர்கிறது. கீழே பொய்கையில் தாமரைமலர் அதை வாயேந்திநிற்பதுபோல் அலர்ந்துநிற்கிறது என்கிறார். இதையொட்டியே மற்றொருகவி, உப்பங்கழியின் கரையிலே ஒரு பூஞ்சோலை. கழிக்கரையில் வளர்ந்த தாழை, ஈயாக்கருமியான ஒரு செல்வன் தான்மட்டும் வயிறு புடைக்கத் தின்று, ஜீர்ணமாகாத சோற்றை வாந்தியெடுப்பது போல் சோற்றைக் கக்குகிறது. வறுமையால் பசிமிகுந்த ஏழை போல் சோலைநடுப் பொய்கைத் தாமரை, தாழைகக்கும் சோற்றுக்கு வாயேந்திநிற்கிறது. இம் மாறுபட்ட நிகழ்ச்சிகளைக் கண்ணுற்றுக் கழியிலுள்ள கருநெய்தல்கள் வம்புபேசும் வீணர்கள்போலக் கண் சிமிட்டி நகைக்க, மல்லிகைக்கொடி முகைகளாகிய வெண்பற்களைக்

காட்டி நகைத்தன என்கிறார். சோலைகளை வருணிக்கும்வாயிலாக ஒரு கொடுங்கோலாட்சியுள்ள நாட்டினியல்பைக் கூறிவிட்டார். என்னே நம் தமிழ்ப் புலவர்களின் கற்பனைநயம்! என்னே கருத்தாழம்!! என்னே சீர்திருத்த மனப்பான்மை!!!

வடமொழியில் வான்மீகிபோல இலக்கிய நெறியைச் சீர்திருத்தியமைத்த பிறவிப்பிரமசாரி திருத்தக்கதேவர் சிந்தாமணியிற் பல இடங்களிலும் சோலைகளைப்பற்றித் தமக்கேயுரிய ஆற்றலுடன் வருணித்திருக்கிறார். இராசமாபுரத்துச் சோலையை,

"மிக்கார்தங் கேட்டின்கண் மேன்மையில்லாச் சிறியர்போல்
நக்காங்கே யெயிறுடைந்த நறவ முல்லை நாள்வேங்கை
தக்கார்போற் கைம்மறித்த காந்தள் அந்தோ தகாதெனவே
தொக்கார்போற் பன்மாவு மயிலுந் தோன்றித் துளங்கினவே"

என வருணிக்கிறார். இதனுள், முல்லையும் காந்தளும் மலர்ந்தன, மாவும் மயிலும் அசைந்தன என்று கூறவேண்டிய ஆசிரியர், ஊழ்வினையாற் பெரியோர் துன்புறக்கண்ட சிறியோர் நகைத்தல்போல முல்லைகள் விரிந்தன; உடனே அருகே மலர்ந்த காந்தள், அந்தோ முல்லைமலர்களே! இது தகாது எனக் கைம்மறிப்பனபோல மலர்ந்தன; சுற்றத்தார்போல் மாவும் மயில்களும் நடுங்கின என்று கூறிப் பெரியோர் சிறியோர் உணர்வினியல்பை எடுத்து விளக்கினார்.

மற்றோரிடத்தில் மல்லிகைகள் மலர்ந்தநிலையில் வண்டுகள் அம்மலரையுழக்கித் தேனுண்டலை அவர் வருணிப்பதையும் பாருங்கள். இயல்பாக மலர்ந்த மல்லிகையைக் காதலரைப்பிரிந்து தனித்திருப்பாரைக்கண்டு பரிகசித்துச் சிரித்தனவாகக்கொண்டு, வண்டுகள் சினந்து மல்லிகைகளே! பிறரை வாளா பரிகசிக்கும் உங்கள் பற்களை உதிர்த்து உங்கள் அகந்தையை அடக்குவோம் என்பனபோல மல்லிகைமலரை மிதித்துழக்கித் தேனைச்சிந்தின என்கிறார்,

சீவகன், மத்திமதேயத்துள்ள ஏமமாபுரத்தருகே ஒரு சோலையை அடைகிறான். சோலையுள் மயிலின்கழுத்தொத்த நிறம் வாய்ந்த காயாமலர் விரிந்தன; சக்கரவர்த்திமுடிசூடுநாளிலே தாமும் முடிசூடிவணங்கும் அரசர்போலக் கோங்கு பலவும் பூத்தன; மராவம் பட்டுத்தலைப்பாகையுடன் அரசருகிருக்கும் கஞ்சுகிபோல விரிந்தன என்கிறார்.

பிறிதோரிடத்தில், முல்லைக்கொடிகள் மகட்கொடை வேண்டிச் செல்பவரைப்போல எங்கும் அலைந்து பரவுகின்றன. குரவம் தன் பாவையைப் பொன்னிதழ்கொண்ட கொன்றைக்குக் கொடுக்கக் குருந்திலிருந்த வண்டுகள் தேனீர்சொரிந்தன. மரகதப்பலகையிற் செம்பஞ்சை உருட்டிப் பாப்பினாற்போலப் பசும்புலடர்ந்த வழுவழுப்பான தரையில் இந்திரகோபங்கள் ஊர்ந்துகொண்டிருந்தன என்கிறார். கலியாணநாட்களிலே செந்நீர் தெளித்துவிளையாடுதலை இன்றும் தமிழ்நாட்டிற் காண்கிறோம்.

மற்றோரிடத்தில் ஒரு பொய்கையில் தாமரை மலர்ந்திருக்கிறது. அதன்மேல் வண்டுகள் சுழல ஒரு சேவலன்னம் தன் பேடையைவிட்டுநீங்கித் தனித்துத்தங்கியிருக்கிறது. இங்கே தாமரை மலரை நெருப்பாகவும் அம்மலரின்மேற் சுழலும் வண்டுகளைப் புகையாகவும் அம்மலரிற் பேடையோடூடித் தனித்துத்தங்கிய சேவலன்னத்தை இல்வாழ்வை வெறுத்து யோகநிலையெய்திய யோகியாகவும் கொள்ளும்படி கூறிய கவிநயம் உற்றுநோக்கி யுவக்கத்தக்கது.

நாம் நம் பழையநூல்களை ஆராய்ந்துகொண்டேயிருந்தால் உவவனங்களைப்பற்றி இவ்வாறே எண்ணிறந்த கருத்துக்களை யறியலாம். அந்நூல்களெல்லாம் நம் தமிழ்நாட்டிற் குன்றாத பொன் சுரங்கங்கள் என்று கூறத் தடையில்லை.

வாழிய செந்தமிழ் வாழ்கநற் றமிழர்
வாழிய பாரத மணித்திரு நாடு.

ஸ்ரீ:

திருச் சிறுபுலியூருலா

காப்பு.

வெண்பா.

திருமா மகள்சேர் சிறுபுலியூர் மாமால்
அருமா கடலமுதை யாரத்—தருமாலை
செய்யுமுலா விற்குத் திருமங்கை வாட்கலியன்
கையும் வடிவேலுங் காப்பு.

நூல்

திருமாலின் யோகநித்திரைவருணனை

1 கார்பூத்த பைந்துளபக் கண்ணன் கருதலர்மேற்
போர்பூத்த நேமிப் புயல்வண்ணன்—சீர்பூத்த

2 பூமடந்தை நீளை புவிமடந்தை தாள்வருட
நாமடந்தை கேள்வ னலம்பாட—மாமணிசேர்

குறிப்புரை

காப்பு:—சிறுபுலியூர் - சோழநாட்டுத் திருமால் திருப்பதிகளுள் ஒன்று. திருமாமகள் என்பது சிறுபுலியூரிற் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் பிராட்டிதிருநாமம். மாமால் - பெருமைபொருந்திய திருமால். மாமாலாகிய அருமாகடலமுது என்க. அருமாகடலமுது - சிறுபுலியூர்த்திருமால் திருநாமம். ஆர-உண்ண=அனுபவிக்க. அருமாகடலமுதை ஆரத் தரும் உலா, மாலைசெய்யும் உலா என இயைக்க. மாலைசெய்யும் உலா - மாலையாக இயற்றப்பட்ட உலா. திருமங்கை - சோழநாட்டகத்ததொரு சிறுநாடு. கலியன் என்பது திருமங்கையாழ்வார்திருநாமங்களுள் ஒன்று.

1. கருதலர் - பகைவர். நேமி - சக்கரம்.

2 பூமடந்தை - திருமகள். நீளை - ஆயர்குலமகள். புவிமடந்தை - பூமிதேவி. தாள் - திருவடி. வருட - தடவ. நாமடந்தைகேள்வன் - பிரமன்.

*

3 பாற்கடலி லாயிரவாய்ப் பாம்பணையின் மேற்கிடந்த
நீற்கடல்கண் டாங்கு நிறம்பூத்துச்—சூற்கரிய

4 கொண்டலொளி மின்விழுங்கிக் கொண்டுசுடர் கால்வதெனப்
புண்டரிகக் காடுபொலிந் தோங்கி—விண்டடவு

5 நீல கிரிகிடந்த நீர்மையெனக் கற்பகத்தின்
கோல வடிவுகுடி கொண்டதெனச்—சால

6 அடியா யிரந்தோள்க ளாயிரம்பொற் பான
முடியா யிரங்கதிர்கள் மொய்ப்பப்—படியிருளைக்

7 காயுங் கதிராழி சங்குகதை வாள்சார்ங்கம்
வாயும் புயவலயம் வாளிமைப்பப்—பாயொளிய

8 செம்பொன் னுடைவயங்கத் தேவர்குழாங் கைதொழுது
செம்பதுமத் தாள்போற்றிச் சேவிப்ப—நம்பரமர்

சிறுபுலியூர்த் தலமான்மியம்

[கண்ணுவர் வரலாறு]

9 யோகுதுயில் காலை யொருநாளிற் கண்ணுவனார்
மாகவலை யெய்தி மறக்குற்றுச்—சோகித்

---

3 நீற்கடல் - நீலக்கடல். சூல் - கரு.

4 கொண்டல் - மேகம். சுடர் கால்வதென - ஒளியை உமிழ்தல் போல. புண்டரிகக்காடு - தாமரைக்காடு. விண்தடவும் - ஆகாயமளாவிய.

5 நீலகிரி - நீலமலை. நீர்மை - தன்மை.

6 பொற்பு - அழகு. படியிருளை - உலகத்திலுள்ள இருட்டை.

7 காயும் - சினந்து ஓட்டுகின்ற. வாயும் புயவலயம் - சிறந்த தோள் வளை. வாள் இமைப்ப - ஒளிவிட. பாய் ஒளிய - பரவிய ஒளியையுடைய.

8 பொன்னுடை - பிதாம்பரம். வயங்க - விளங்க. பதுமம் - தாமரை. நம் பரமர் - நம் இறைவர் (திருமால்).

9 யோகுதுயில்காலை - யோகநித்திரைசெய்தபொழுது. கண்ணுவனார் - கண்ணுவமுனிவர். மறுக்குற்று - கலங்கி.

1–9 புயல்வண்ணன் திருமகளும் புவிமகளும் ஆய்மகளும் அடிவருட, பிரமன் துதிக்க, நிறம்பூத்து, ஓங்கி, மொய்ப்ப, இமைப்ப, வயங்க, சேவிப்ப, பாற்கடலில் நீலகிரிகிடந்தநீர்மையெனக் கற்பகத்தின் கோலவடிவு குடி கொண்டதென யோகுதுயில்காலை என வினைமுடிவுசெய்க.

10 இதுநாட் பிறந்துபய னென்பெற்ரு மென்று
கதிநாட்டுச் செல்லக் கருதி—முதுநிலத்து

11 வானவர்கள் போற்றி மதிக்கு முலோககுரு
வானபெரு மாளை யடைதுமென—நானிலத்திற்

12 போற்றுமிடம் யாவையினும் புண்ணியபூமித்தலம்பார்த்
தேற்றுதவ மாங்கே யிழைத்துமென—ஆற்றலால்

13 ஞான விழிதிறந்து நான்குதிக்கும் பார்த்துநமக்
கானவிட மீதென் றறிவுற்று—மோனமுனி

[இத்தலத்துப் பேறுபெற்றேர்]

14 காலமொரு மூன்றுங் கருதி யரவரசு
சீல மிகுதவங்கள் செய்யிடமும்—ஞாலமிசை

15 பண்டு வியாக்கிர பாதர் தவம்பலிக்க
விண்டு வுரைத்த வியலிடமும்—புண்டரிகக்

16 காடு மலர்த்துங் கதிரோன் றவம்புரிந்து
நீடு திருநாள் நிறைவேற்றி—நாடி

---

10 இது நாள் - இக்காலத்து. கதிநாட்டு - புகலிடமாகிய வைகுந்த வானுட்டிலே. முதுநிலம் - வீட்டுலகு.

11 வானவர் - நித்தியரும் முத்தர்களும். உலோககுரு - லோகாசாரியன்; என்றது திருமாலை. அடைதும் என - அடைவோமென்று. நால் நிலத்தில் - முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்னும் நான்குவகையான நிலங்களில்.

12 போற்றும் இடம் யாவையினும் - புகழ்ந்துபேசப்படும் இடம் எல்லாவற்றுள்ளும். ஏற்றுதவம் - உயர்நிலையடையச்செய்கின்ற தவத்தை. ஆங்கே - அந்தப் புண்ணியதலத்திலே. இழைத்துமென-செய்வோமென்று.

13 மோனம் - மௌனம்.

14 காலம் ஒரு மூன்றும் கருதி - இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் முக்காலநிகழ்ச்சிகளையும் எண்ணி. அரவரசு - ஆதிசேடன்.

15 விண்டு - விஷ்ணு=திருமால். வியலிடம் - பெருமையுடைய தலம்.

17 ஒருபத் துருவா யுதித்தபிரான் றொண்டர்
இருபத்து நால்வர்குடி யேற்றி—வருபத்தி

18 செய்யு மிடமுந் திசைமுகத்தோன் மாதவத்துக்
கெய்து மிடமுமவ னெம்மானைக்—கைதொழுது

19 தோத்திரஞ் செய்து துதிசொல்வோர் வாழ்வுபெற
வாய்த்த தலமு மலரயனார்—தீர்த்தமெனத்

20 தேவார் நதியனைத்துந் தெற்கா லடிநிழலி
லாவா கனஞ்செய் யறைபுனலும்—நாவிரண்டு

21 கொண்ட வனந்தன் குளிர்சோலை சூழ்தடமும்
முண்டகத்தோ னுக்கு முகுந்தனார்—பண்டைமறை

22 யெட்டெழுத்து மீரா றெழுத்துமுப தேசத்தாற்
கட்டுரைக்க வாய்த்த கவினிடமுஞ்—சிட்டர்சேர்

23 தென்பாண்டி நாட்டுறையுந் தேவசன்மா வுள்ளுருகி
அன்பான புத்திரசில் லாமையினாற்—றன்புறநாட்

24 கும்பமுனி யெய்திக் குடகா விரிநாட்டில்
நம்பர் சிறுபுலியூர் நண்ணுகென—நம்பியே

---

17 ஒருபத்து உருவாய் உதித்தபிரான் - திருமால்.

16–18 கதிரோன் தவம்புரிந்து, திருமாலடியார் இருபத்துநால்வரைக் குடியேற்றித் திருநாள் நிறைவேற்றிப் பத்திசெய்யும் இடமும் எனக் கூட்டுக.

18 திசைமுகத்தோன் - பிரமன். எம்மான் - எம் இறைவன் = திருமால்.

20–21 தேவார் - தெய்வத்தன்மைபொருந்திய. ஆவாகனஞ்செய்தல் - நிலைபெறச்செய்தல். முண்டகத்தோன் - பிரமன். முகுந்தன் - திருமால். இவ் விரண்டுகண்ணியாலும் தீர்த்தமான்மியம் கூறப்பட்டது.

22 எட்டெழுத்து - அஷ்டாக்ஷரம். ஈராறெழுத்து - துவாதசாக்ஷரம். கவின் - அழகு. சிட்டர் - பெரியோர்.

24 கும்பமுனி - அகத்தியர். நம்பர் - நம் இறைவர் = திருமால்.

25 கூராழி மால்கனகக் கோகனகத் தாள்பணிந்தாங்
காரா வமுதை யடிவணங்கி—நேரே

26 திருமா மகள்சரணஞ் சேவித்துக் கண்ணால்
அருமா கடலமுதை யார்ந்து—தருமருவு

27 சக்கர தீர்த்தத் தடங்கரையிற் சுற்றமொடும்
புக்கிருந்த நாட்கனவிற் பூவைவண்ணன்—மிக்கவராய்

28 மூவர் தனைய ரளித்துமென வம்முறையே
மூவர் பிறந்து முகுந்தனுர்க்—கேவற்

29 பணிவிடை செய்யப் பலித்த விடமுங்
கணிவிடையி லேறுகறைக் கண்டர்—அணியொருபால்

30 ஈட்டு தவஞ்செய் திருக்குமிட மும்பார்த்து
மூட்டு கனலை முறைவகுத்துத்—தாட்டுணைமே

31 லாகத் தலைகீழாய் நின்றுதவ மாங்கிழைப்ப

[கண்ணுவர்தவத்தாலுவந்த திருமால் இத்தலத்து அவர்க்கு அருள்புரிந்துதங்குதல்]

மாகத் தமரர் மறுக்குற்று—நாகத்

---

25 கனகக்கோகனகத்தாள் - பொற்றாமரையடி.

26 சரணம் திருவடிகளை. ஆர்ந்து - உண்டு=அநுபவித்து.

27 சக்கரதீர்த்தம் - சிறுபுலியூரிலுள்ள தீர்த்தங்களுள் ஒன்று. பூவைவண்ணன் - திருமால்.'

28 மூவர்தனையர் - மூன்றுபுத்திரர்கள். அளித்தும் என - கொடுப்போமென்றுசொல்ல. முகுந்தனுர்க்கு - திருமாலுக்கு

28–29 ஏவற்பணிவிடை - ஆஜ்ஞா கைங்கரியம். பலித்தஇடமும் - பலனளித்த தலமும். கணி - கண்ணி=நினைந்து. விடை - காளை. கறைக்கண்டர் - காளகண்டராகிய சிவபெருமான். அணி - அண்ணி=கிட்டி.

30 தாட்டுணை - இரண்டுகால்களும்.

31 மாகத்து அமரர் - விண்மிசைத் தேவர். மறுக்குற்று - கலங்கி,

32 தணையானே பாலாழி யானே யடியோம்
துணையானே யென்று துதிப்ப—இணையிலீர்

33 நீவிர் வெருவலிர் நில்லா வுமதுலகில்
ஆவல்புரி கின்று னலன்கண்டீர்—யாவருக்கும்

34 எட்டா வுலகம் புகுவா னிழைத்தவரம்
முட்டா வருந்தவத்தோன் முன்செல்வான்—சுட்டி

35 எழுதுமியாம் நீவிருமங் கேகுவீ ரென்னத்
தொழுதங் கமரர்குழாஞ் சூழக்—கெழுதகைய

36 கண்ணன் வனத்துநின்ற கண்ணுவனுர் கண்ணெதிரே
அண்ணன் மணிப்பாம் பணைமீது—நண்ணியே

37 வெள்ளி வரையிற் கருணா யிறுவிளங்கிப்
பள்ளிகொண்டா லன்ன படிதோன்ற—உள்ளுருகி

38 வெள்ளங் கொழித்து விழிநீ ருகவுடலம்
பொள்ளென் றுரோமம் புறம்பொடிப்பத்—தள்ளி

9–31 கண்ணுவனுர் பிறந்து பயனென்பெற்றேமென்று கவலையெய்தி, மறுக்குற்று, சோகித்து, கதிநாட்டுச்செல்லக்கருதி, பெருமானையடைதுமென, தவமிழைத்துமென, நான்குதிக்கும்பார்த்து, இடமும் இடமும் இடமும் இடமும் தலமும் புனலும் தடமும் இடமும் இடமும் இடமும் (ஆகிய சிறுபுலியூரைப்) பார்த்து, இது நமக்கான இடமென்று அறிவுற்று, கனலை வகுத்து, நின்று தவம் இழைப்ப என வினைமுடிவுசெய்க.

33 நீவிர் - நீங்கள். வெருவலிர் - பயப்படாதீர்கள். ஆவல்புரிகின்றுனலன் - விரும்பவில்லை. கண்டீர் முன்னிலையசை.

34 யாவருக்கும் எட்டா உலகம் - எவராலும் அடைதற்கரிய வைகுந்தம். புகுவான் - அடையும்பொருட்டு. அருந்தவத்தோன் முன்செல்வான் - அரிய தவத்தோனுன கண்ணுவனுக்குக் காட்சிதர. சுட்டி - கருதி.

35 கெழுதகைய - செறிந்த குணங்களையுடைய.

31–37 கண்ணன், நீவிர் வெருவலிர், உமதுலகில் ஆவல்புரிகின்றுனலன், அருந்தவத்தோன்முன் செல்வான்சுட்டி யாம் எழுதும், நீவிரும் அங்கேகுவீர் எனக் கண்ணுவனுர் எதிர் பாம்பணைமீது தோன்ற என முடிக்க.

38 உடலம் - மெய். பொள்ளென்று - விரைந்து. உரோமம் புறம்பொடிப்ப - புளகம் தோன்ற. விழி நீருக, உடலம் புளகங்கொள்ள என்க.

39 உரைகுழறக் கைதொழுத வோர்மா முனியைக்
கரைபொருத கட்கருணைக் கண்ணன்—பெரிதுவந்து

40 கண்ணுவனை யுள்ளக் கருத்தே தெனநினது
விண்ணுலகம் வேண்டு மெனவிளம்ப—அண்ணலும்

41 சத்திய லோகந் தனினீயும் வேதாவும்
சித்த மகிழச் சிறந்திருந்து—முத்தராய்

42 வாய்த்த திருநாட்டில் வம்பினெனக் கண்ணுவனா
ரேத்தியிறை யோனை யினிதிறைஞ்சிப்—பூத்ததிரு

43 வுந்தியா யிவ்விடத்தி லூழிபல காலமெல்லாம்
எந்தையே வாழ்க வெனவிளம்ப—அந்தமுறை

44 பாலாழி நாகணையிற் பள்ளிகொண்ட கோலமொடு
நீலாழி போல்வளர்ந்த நேமியோன்—வேலை

மூர்த்திமான்மியம்

45 உருத்துவரும் வெவ்விடத்தா லும்பரெலா மஞ்ச
உருத்திரனும் பாத்திரத்தி லுண்டோன்—பெருத்தநர

46 சிங்கமாய்ப் பொன்ன னுரநகங் கீறியும்பின்
வெங்கண்மா கோபம் விளைதலுமே—துங்கமிகு

---

39 உரை - சொல்.

41 சத்தியலோகம் - பிரமலோகம். வேதா - பிரமன். முத்தராய் - பந்தமற்றவராய்.

42 திருநாடு - வைகுந்தநாடு. இறையோனை - திருமாலை. இறைஞ்சி - வணங்கி.

44 நீலாழி - நீலக்கடல். நேமியோன் - சக்கராயுதத்தையுடைய திருமால். வேலை - (திருப்பாற்) கடலின்கண்.

45 உருத்து - சினந்து. வெவ்விடத்தை - கொடிய விஷத்தை. உம்பர் - தேவர். அஞ்ச - பயப்பட. உருத்திரனும் பாத்திரத்தில் உண்டோன் - சிவபிரானுகிய கலத்திற்கொண்டு உண்டோன்.

46 பொன்னன் - இரணியன். உரம் - மார்பு.

47 தேவ ரொடுசரபச் சிம்புளாய் வந்தவனைக்
காவதம்போய் வீழக் கரஞ்சிரங்கால்—மேவுமுடல்

48 சின்னபின்ன மாக்கித் திசைதோறும் விட்டெறிந்து
தன்னிகரில் கோபந் தணிந்தருள்வோன்—பின்னுசடை

49 அக்கரவு சூடிக் கடுசூல மன்றளித்துச்
சக்கரமுஞ் சங்குந் தரித்தருள்வோன்—செக்கமலப்

50 பஞ்சடியிற் பார்த்தன் பரிந்திட்ட பூவானர்
செஞ்சடையிற் காட்டித் தெளிவித்தோன்—கஞ்சன்

51 அடிவிளக்குங் கங்கை யரைச்சோமன் கட்டும்
முடிவிளக்கக் கண்ட முதல்வன்—படிவிளக்க

52 விச்சுவ கன்மன் விதித்தநந்தி யாவருத்தம்
நச்சிச் சலசயன நண்ணினேன்—நச்சுவிளை

---

47 சரபமாகிய சிம்புள்; இஃது எட்டுக்கால்களையுடையதொருபறவை; சிங்கத்தின் நாவையுண்டு சீவிப்பதென்பர்; இரணியனைக்கொன்ற நரசிங்கப் பெருமான்சினத்தைத் தணிக்கும்பொருட்டுச் சிவபெருமான் சரபவுருவில்வர நரசிங்கப்பெருமான் அதன்வலியையும் அழித்துச் சினந்தணிந்தனர் என்பது புராணகதை. காவதம் - காதம். காம் - கை. சிரம் - தலை.

48-49 பின்னு சடை அக்கு அரவு சூடிக்கு - பின்னிய சடையின்கண் சங்குமணியும் பாம்பும் சூடிய சிவபிரானுக்கு. செக்கமலம் - செங்கமலம்; வலித்தல்விகாரம்.

50 பார்த்தன் - அருச்சுனன். பரிந்து - விரும்பி. அரனர் - சிவபெருமான். கஞ்சன் - பிரமன்.

51 அடிவிளக்கும் கங்கை-(தன்)அடியிணைகளை யாட்டிய கங்கைநீரை. அரைச்சோமன் - பிறைமதி. கட்டும் - தரித்த. படி - பூமியை.

52 விச்சுவகன்மன் விதித்த - தெய்வத்தச்சனால் நிர்மாணம்பண்ணப் பட்ட. இந்தக்கண்ணியுள் இத்தலத்திறைவன் எழுந்தருளியுள்ள விமானம் குறிக்கப்படுகிறது. இவ்விமானத்தின் பெயர் பிறநூல்களில் நந்தவர்த்தனம் என்று காணப்படுகிறது. இங்கு நந்தியாவருத்தம் என்றிருக்கிறது. இவற்றின் பொருளும் பொருத்தமும் ஆராயத்தக்கன. நச்சி - விரும்பி. சலசயனம் - மாயப்படுக்கை=யோகநித்திரை. நச்சு விளை-விஷம் உண்டாகின்ற.

53 பன்னகத்தி லாடியான் பண்டுமெமக் காவணியான்
பொன்னனுடல் கீண்டுபுரட் டாதியான்—முன் னுலகுண்

54 கொள்ளைப் பசியான்வெங் கூற்றினடங் கார்த்திகையான்
வள்ளத் தனத்திருவை மார்கழியா—னுள்ளினரை

55 மீண்டுடம்பு தையான் விதிமறைக்கு மாசியான்
பாண்டவர்போ ரிற்காண்டீ பங்குனியான்—வேண்டினோர்

56 தஞ்சித் திரையான் றமிழ்மறைவை காசியான்
அஞ்சப் புகும்வினைக்கோர் ஆனியான்—விஞ்சுற்ற

---

53 பன்னகத்தில்-பாம்பின்மேல். ஆடியான்-நடித்தோன். இக்கண்ணி முதல் 56ம் கண்ணிவரை பன்னிரண்டுமாதப்பெயர்களும் (ஆடி முதல்) முறையே தொனிக்கப் புணர்த்த நயம் காண்க. பண்டும் எமக்கா அணியான்-முன்பும் (இராம கிருஷ்ணாதி அவதார காலத்தும்) எங்கள்பொருட்டு எளிதில் அடையுமாறு கிட்டியவன். உம்மையால் இன்றும் எமக்கு அர்ச்சா ரூபியாய் எளிதில்அடையுமாறு கிட்டியவன் என்றும் பொருள்படும். பொன் னன் - இரணியன். கீண்டு - பிளந்து. புரட்டு - புரட்டிய. ஆதியான் - தலைவன். முன் உலகு உண்-முன்னே (பிரளயகாலத்து) உலகத்தையுண்ட.

54 கொள்ளை - மிகுதியான. வெம் கூற்றின் அடங்கார்த் திகையான்-கொடியபேச்சினையுடைய பகைவர் திறத்து மயங்காதவன். வள்ளம் - கிண்ணம். திருவை - திருமகளை. மார்கழியான் - மார்பினின்று நீங்காதவன். உள்ளினரை - நினைந்தோரை.

55 மீண்டு உடம்பு தையான் - மறுபடியும் உடம்பிற் பொருந்தாதவன் (பிறவியறுப்பவன்). விதி மறைக்கும் ஆசியான் - ஊழையும் தடுக்கும் வாழ்த்தையுடையான். பாண்டவர்போர் - பாரதப்போர். காண்டீபம் குனியான் - வில்வளையாதவன் (படையெடாதவன்). இங்கே காண்டீபம் என்பது வில் என்னும் மாத்திரையாய்நின்று உபலக்ஷணத்தால் பிற படைக்கலங்களையும் குறித்தது.

56 இத்தலத்துத் திருமாலைக் கதிரவன் சித்திரைமாதத்துச் சித்திரை நக்ஷத்திரத்தோடுகூடிய பூரணைநாளில் பிரதிட்டைசெய்து வழிபட்டு விழா வெடுத்தமையாற் 'சித்திரையான்' என்றார் (69, 71 ஆம் கண்ணி பார்க்க). தமிழ்மறை வைகு ஆசியான் - தமிழ்மறையாகிய ஆழ்வார்களருளிச்செயல்களில் முன்னுள்ள திருப்பல்லாண்டாகிய வாழ்த்தையுடையான். அஞ்சப் புகும் வினைக்கு ஓர் ஆனியான் - அஞ்சும்படிவரும் தீவினைகளுக்குக் கேட்டைவிளைப்பவன். விஞ்சுற்ற = மிக்க.

57 எழ்பாரு முய்ய விசைத்தமிழ்வே தந்தொகுத்த
ஆழ்வார்க ளுள்ள மகலாதான்—கோழிமயில்

58 சேரரங்கத் தம்மான் சிறுபுலியூரான் பேரான்
னீரகத்து மூரகத்து நின்றபிரான்—காரகத்தான்

59 மாயன் முகுந்தன் மதுசூ தனன்வாமன்
ஆயன் முராரி யகிலேசன் —தூய

60 அரிகே சவன்கண்ண னாதிபரந் தாமன்
பரவாசு தேவன்கோ பாலன்—நரசிங்கன்

61 ஆதி வராகனச்சு தானந்தன் கோவிந்தன்
மாதவன்மால் விண்டு வராமன்—சிதரன்

62 ஆரா வமுத மருமா கடலமுதம்
நாரா யணன்பரம னல்வேதன்—சீரரா

63 காயத்தா னூற்றுவரைக் காயத்தான் பாண்டவர்பங்
காயத்தா னனச காயத்தான்—காயத்தான்

64 வாகனத்தான் சொன்னவடி வாகனத்தான் வேள்வியிலா
வாகனத்தான் செய்யதிரு வாகனத்தான்—மாகனத்த

---

57 கோழிமயில் - உறையூர்நாச்சியார்.

57—58 திருமா லுக்கந்தருளின தலங்களுட் சிலவற்றைக் குறிக்கும் 'கோழிமயில் சேரரங்கத்தம்மான் சிறுபுலியூரான் பேரான்' என்பதனுள் கோழி, மயில், மான், புலி, ஆன் (இடபம்) என வேறு பொருளும் தொனிக்கப் புணர்த்த நயம் காண்க.

59-62 இக்கண்ணிகளுள் திருமால் திருநாமங்களை அடைவிரவாது அடுக்கிய நயம் நோக்கத்தகும்.

62-63 சீரார் ஆகாயத்தான் - சிறப்புப்பொருந்திய பரமாகாயத்தை யுடையான். நூற்றுவரைக்காயத் தான் பாண்டவர்பங்காய் அத்தானன சகா யத்தான் - துரியோதனாதி நூற்றுவரையும் கொல்லும்பொருட்டுத் தான் பாண்டவர்பக்கத்துநின்று மைத்துனனுமாகிய உதவியையுடையான். காயத் தான் - உருவத்திருமேனியுடையான்.

64 வாகு அ(ன்)னத்தான் சொன்ன வடி வாகன் நத்தான் - அழகிய அன்னத்தை யூர்பவனான பிரமனால் துதிக்கப்பட்ட (முழங்கால்வரையில்) தாழ்ந்த தோள்களையுடையான் (பிரமன் துதித்தமை 18-ஆம் கண்ணியிற் காண்க.) பாஞ்சஜந்நியமென்னும் சங்கத்தையுடையான். வேள்வியில் ஆவா கனத்தான் - யாகத்தில் நிலைபெறுவோன்.

65 ஆழியான் கண்டுயில்பா லாழியா னொற்றைநட
வாழியா னாழிநடு வாழியான்—ஆழியநீர்

66 மீனாகி யாமையாய் வெள்ளெகின மாயாயர்
கோனாகி நீளுங் குறளாகி—யேனாகி

67 மூவ ரிராமராய் மூரிநர சிங்கமதாய்த்
தேவர்சூழ் கற்கித் திருவுருவாய்—மேவினோன்

68 கண்ண புரத்தான் கணமங்கை யான்காயா
வண்ணபுரத் தானென் மனத்திறான்—கண்ணனருட்

வசந்தவிழாவோப்பனை

69 காதவன்முன் செய்த திருநா ளழகுபெற
மாதர் குழாங்கள் மனைகடொறுஞ்—சோதி

70 விளக்கேற்றித் தூபமிட்டு மென்மலர்க டூவி
வளக்கதலி தண்கமுகு வைப்பத்—துளக்கறவே

71 ஆதி யுகம்வந் தடிக்கொள்ளச் சித்திரையிற்
சீத நிலவிற் றிருநாளுக்—கேதமிலா

---

65 ஆழியான் - சக்கரப்படையுடையான். பாலாழி - திருப்பாற் கடல். நடவு ஒற்றையாழியானாழிநடு வாழியான் - செலுத்தப்படுகிற ஒற்றைச்சக்கரத்தையுடைய தேரையுடையனான சூரியனுடைய மண்டலத்தினிடையே வாழ்தலையுடையான். ஆழிய - ஆழமான.

66 வெள் எகினம் - வெண்மைநிறமுடைய அன்னம். ஆயர்கோன் - கண்ணன். குறள் - வாமனன். ஏனாகி - ஏனமாகி=வராகமாகி.

67 மூவர் இராமர் - பரசுராமன், தசரதராமன், பலராமன் என்பார். மூரி - அடங்காத.

68 காயாவண்ணபுரத்தான் - காயாமலர்நிறத்தையுடையதிருமேனியினன். கண்ணனருட்கு - திருமாலின் அருளைப் பெறும்பொருட்டு.

69 ஆதவன் - சூரியன்.

70 தூபம் அகிற்புகை முதலியன. கதலி - வாழை. துளக்கற - கலக்கம் ஒழிய.

71 ஆதியுகம்வந்தடிக்கொள்ள - (கலிகெட்டுக்) கிருதயுகம்வந்து நிலைபெற. ஏதம் - குற்றம்.

72 மண்டபமுங் கோபுரமு மாளிகையுஞ் செய்குன்றும்
விண்டடவு நீண்மதிலும் வீதிகளும்—அண்ட

73 முகடளக்கும் பொற்கொடிகள் மூரிக் கடல்வாய்
அகடளக்கும் வெண்டிரைபோ லாடத்—துகடீர்ந்த

74 காவணமு மேடைகளுங் காவுங் கனகமணி
யாவணமு மெங்கு மலங்கரித்துப்—பூவலரும்

[கொடியேற்றம்]

75 வாவிச் சிறுபுலியூர் மாயனரு மாகடலைச்
சேவித் திறைஞ்சத் திருநாளுக்—கோவாத

76 தேவர் முனிவர் திசைகா வலருரகர்
யாவரும் வம்மி னெனவழைத்துக்—கூவுதல்போற்

77 சொற்கம் பயில்வோர் தொழவருதற் கேணியாம்
பொற்கம்ப மேற்கருடப் புள்ளரசாய்—நிற்கும்

78 படியேற மக்கட் பரப்பெல்லா மாங்கே
குடியேறக் கொற்றக் குடைக்கீழ்—நெடிதாளும்

[திருமஞ்சன-திருவாராதனச் சிறப்பு]

79 நெல்லைத் திருமலை ராய னிறைகமலக்
குல்லைத் திருமகட்குக் கோவிலாய்ச்—செல்வத்தால்

80 ஆறிருநூ றம்பொ னமைத்தகான் மண்டபத்தின்
ஏறி யருளி யினிதிருந்து—காறுமலர்

72-73 மண்டபத்திலும் கோபுரத்திலும் மாளிகையிலும் செய்குன்றுகளிலும் மதில்களிலும் வீதிகளிலும் கொடிகள் ஆட என இயைக்க. துகள் தீர்ந்த - புழுதி நீங்கிய.

74 காவணம் - பந்தல். ஆவணம் - கடைவீதி. அலர்தல் - விரிதல்.

75 வாவி - தடாகம். ஓவாத - குறையாத.

76 திசைகாவலர்-திக்குப்பாலர். உரகர்-நாகர். வம்மின்-வாருங்கள்.

78 கொற்றக்குடை - வெற்றிக்குடை.

79 நெல்லை - திருநெல்வேலி. திருமலைராயன் என்பார் இத்தலத்து 80.ஆம் கண்ணியிற்கூறும் வசந்தமண்டபம் கட்டுவித்தவர். குல்லை - துழாய்.

80 ஆறிருநூறு அம்பொன் அமைத்த கால் மண்டபத்து - ஆயிரத்திருநூறு செம்பொன்னாற்செய்த கால்களையுடைய மண்டபத்து.

81 வீட்டி லிருந்து விளையாடு மன்னமும்வெண்
கோட்டி லிருந்த குலமயிலும்—தோட்டுாறும்

82 பூமாலை சூடிக் கொடுத்துப் புதியதமிழ்ப்
பாமாலை பாடும் பசுங்கிளியும்—தாமுந்

83 திருமஞ் சனமாடித் தேவியருந் தாமும்
ஒருமஞ்ச மீதிலுவந் தேறிக்—கருமவிதி

84 ஆகமவே தாந்தபஞ்ச ராத்திரத்தி னாலுணர்ந்த
பாக வதர்கள் பணிகேட்பச்—சேகறுசீர்

[வீதிப்புறப்பாடு]

85 ஆரா தனங்கொண் டருளி யமுதுசெய்தாங்
கோராரும் வீதி யெழுந்தருளி—நீரார்

86 பவளக் குடையும் பலகோடி முத்தின்
தவளக் குடையுந் ததைந்து—திவளுற்

87 றொருபா னிலவு மொருபால் வெயிலும்
இருபா லொளிவிட் டெறிப்ப—இருபாலும்

88 வெண்கவரி வீசமதி வெய்யவன்போ லாலவட்டம்
பண்கவருஞ் சொல்லார் பணிமாறப்—பண்பயின்ற

89 மத்தளங் காள மகரயாழ் நாகசுரந்
தித்திமுக வீணை சிறந்தொலிப்பச்—சித்தசனன்

80–81 நாறு மலர்வீட்டிலிருந்து விளையாடும் அன்னம் என்றது திருமகளை. வெண்கோட்டில் இருந்த குலமயில் என்றது பூமிதேவியை. வெண்கோடு - (வராகப்பெருமானது) வெள்ளிய கொம்பு. தோடு - இதழ்.

82 கிளியென்றது ஆண்டாளை.

83 மஞ்சம் - கட்டில். கருமவிதி - கருமங்களைவிதிக்கின்ற.

84 பஞ்சராத்திரம் - பாஞ்சராத்திராகமம். சேகு - குற்றம்.

86 தவளக்குடை - வெண்குடை. ததைந்து - நெருங்கி. திவளுற்று - விளங்கி.

88 ஆலவட்டம் - விசிறி. பணிமாற - வீச.

89 தித்தி - ஊதுகுழல். முகவீணை - ஒருவகையிசைக்கருவி. சித்தசனன் - மன்மதன்.

90 வேதம் பயிலும் விழிமடவார் சங்கீத
நாதம் பயின்று நடமாடப்—போதத்

91 தரிசனங்க ளாகி யகலாது ஞானப்
பரிசனங்கள் சூழ்ந்துபணி கேட்பப்—பரிவான

92 ஆழ்வார்கள் பாட லருளிச் செயல்வேதம்
வாழ்வாம் வயிணவர்கள் வாழ்த்தெடுப்பத்—தாழ்விலா

93 வேத முழங்கவித்தி யாதரரு நாரதருங்
கீதவிசை வீணைக் கிளைபாட—மீதுலகில்

94 அந்தர துந்துமிநின் றார்ப்பெடுப்பப் பல்லியங்கள்
சிந்து முழக்கிற் சிறந்தொலிப்பக்—கந்தனுக்குத்

95 தாதையொடு வேதாவைத் தந்தபிரான் வந்தானென்
றாது திருச் சின்ன வொலிமுழங்க—வீதி

96 உலவுதிரு நாளி லொருநாளி லெங்கும்
நிலவுபுக ழோங்கி நிறைய—நலம்விளங்கத்

---

90 போதம் - ஞானம்.

91 பரிசனங்கள் - அடியார். பரிவு - அன்பு.

92 ஆழ்வார்கள்பாடலாகிய அருளிச்செயல்வேதம் என்க.

93 மீதுலகில் - மேலுலகில்.

94 பல் இயங்கள் - பலவகை வாத்தியங்கள். சிந்து - கடல்.

95 கந்தனுக்குத்தாதை - முருகனுக்குத்தந்தை = சிவபிரான். வேதா-பிரமன். திருச்சின்னம் - எக்காளம்.

44-96 நேமியோன் உண்டோன் ... ... கணமங்கையான் என் மனத்தினன், திருநாள் அழகுபெற மாதர்குழாம் விளக்கேற்றித் தூபமிட்டு மலர்கள்தூவிக் கதலி கமுகுவைப்ப, ஆதியுகம்வந்து ஆடிக்கொள்ள, மண்டபமும் .....வீதிகளும் பொற்கொடிகள் ஆட, காவணமும் ... ... ஆவணமும் எங்கும் அலங்கரித்து, இறைஞ்சு திருநாளுக்கு யாவரும் வம்மின் எனக் கூவுதல்போற் கருடப்புள் ஏற, மக்கட்பரப்பெல்லாம் குடியேற, மண்டபத்தில் ஏறியருளி, இருந்து, அன்னமும் மயிலும் கிளியும் தாமும் ஆடி, ஏறி, ஆராதனங்கொண்டருளி, எறிப்ப, வீச, பணிமாற, ஒலிப்ப, நடமாட, கேட்ப, வாழ்த்தெடுப்ப, பாட, ஆர்ப்பெடுப்ப, ஒலிப்ப, முழங்க உலவுதிருநாளில் ஒரு நாள் என முடிவு கொள்க.

[கோலங்காண்டல்—கேசாதிபாதம்]

97 தேவியருந் தாமுமொரு சிங்கா தனத்திலிருந்
தாவியன மாதர்க் கணியணிந்து—மாவலிபால்

98 மூவடிமண் வாங்கியநாண் மூதண்ட கூடமுட்டத்
தாவடி போன தனியிடத்தே—ஓவா

99 திழைத்த பசும்பொன் னிடைபதும ராகந்
தழைத்த வயிரமுடி சாத்தி—மழைத்த

100 இருளிடையே யிந்திரவில் விட்டதெனக் கேசச்
சுருளருகே கோறம்புஞ் சூட்டிப்—பெருகும்

101 மகரக் குழையெழுவர் மல்லருயிர் மாய்த்த
சிகரத் திடையுலவச் சேர்த்திப்—பகிரண்டம்

102 எல்லாம் விழுங்கு மிடத்தே செழுந்தரள
வில்லாருங் கண்டசரம் வேய்ந்தருளிக்—கொல்லரனார்க்

103 கைய மளித்த விடத்தே யழகுபெறத்
துய்யமணிப் பச்சைத் தொடியணிந்து—வையகப்பைந்

104 தோகை களபத் துணைப்பொருப்புச் சேரிடத்தே
வாகு வலயம் வனைந்தருளிக்—கோகனகை

---

98 தாவடி - தாவி. தனியிடமென்றது சிரத்தினை. மழைத்த - குளிர்ச்சியையுடைய.

100 கேசம் - குழல். கோறம்பு - நெற்றிப்பட்டம் (திவ். பெரியாழ். 3-4-6).

101 மல்லருயிர்மாய்த்த சிகரம் என்றது தோள்களை.

101–102 அண்டமெல்லாம் விழுங்குமிடம் - கழுத்து. தரளம் - முத்து. வில் - ஒளி. கண்டசரம் - கழுத்தணி. கொல் அரனார் - அழித்தற்கடவுளான சிவபிரான்.

102–103 அரனார்க்கு ஐயம் அளித்த இடம் என்றது கைத்தலத்தை. தொடி - வீரவளை.

103-104 வையகப்பைந்தோகை - பூமிதேவி. களபம்-கலவைச்சாந்து. துணைப்பொருப்பு - இணைத்தனம். களபத்துணைப்பொருப்புச்சேரிடம் என்றது தோள்களை. வாகுவலயம் - தோள்வளை. வனைந்தருளி - தரித்து. கோகனகை - திருமகள்.

105 தங்கு மிடத்தே தழுவுதுழாய் மாலையொடு
கொங்கு வனமாலைக் கொத்தணிந்து—திங்க

106 ணிலவும் வெயிலும் நிரந்தெனமுந் நூலும்
விலகு கவுத்துவமும் வேய்ந்து—குலையா

107 துருவுதர வண்ட மொளித்த விடத்தே
திருவுதர பந்தனமுஞ் சேர்த்தி—அருகு

108 துவளொளிப்பொன் னுடை சுரிகையுடன் வீக்கிச்
சிவளிகைக் கச்சாற் செறித்துத்—தவறுடைய

109 கல்லைப்பெண் ணாக்கிக் கரியைமக வாக்கியதற்
கெல்லைக் குறியா மிரண்டிடத்தே—தொல்லை

110 உருச்சிலம்புங் கங்கை யுடன்மறைக ளார்க்கும்
திருச்சிலம்புங் கிண்கிணியுஞ் சேர்த்தி—மருச்செறிந்த

104–105 கோகநகை தங்கும் இடம் என்றது திருமார்பை. கொங்கு - தேன். வனமாலை - பலவகைநிறமுள்ள மலரும் தழையும் கொண்டு தொடுக்கப்பட்ட மாலை.

106 நிரந்தென - நிரல்பட அமைந்தாற்போல. முந்நூல் - பூணூல் கவுத்துவம் திருமால் மார்பின் மணி. வேய்ந்து - பூண்டு.

106-107 அண்டம் உருவுகுலையாது எனக் கூட்டுக. அண்டம் ஒளித்த இடம் - வயிறு. உதரபந்தனம் - அரைப்பட்டிகை.

108 சுரிகை - உடைவாள். வீக்கி - கட்டி. சிவளிகைக் கச்சு - உடை மேற்கட்டுங் கச்சு (திவ். பெரியதிரு. 8 1 7). செறித்து - கட்டி. தவறு - கொண்டாற்பிழைத்த குற்றம்.

109 கல் இங்கு அகலிகை. கரியை மகவாக்கியது - உத்தரை கருவிலிருந்தசிசு அசுவத்தாமன் ஏவிய அபாண்டவாஸ்திரத்தால் கரிந்ததனை மீட்டும் மகவாக்கிய கண்ணன் கழல். அதற்கு எல்லைக்குறியாம் இரண்டிடம் - அக்கழலுக்கு முடிவிடமாகக் குறிக்கப்படும் கணைக்காலும் விரலுமாகிய இரண்டுறுப்பிலும். தொல்லை - பழமையான.

110 உருச் சிலம்பும் - அச்சமெழ ஒலிக்கின்ற. சிலம்பு - நூபுரம். கிண்கிணி - தண்டை.

42.	அகராதிநிகண்டு	0	12	0
43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100)...	1	0	0
48.	சேதுராமும் தமிழும்	0	6	0
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	0	6	0
54.	அரும்பொருள்விளக்கநிகண்டு	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை...	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ...	0	5	0
64.	சிராமலைக்கோவை	0	12	0
65.	மத்யமவியாயோகம்	0	2	0
67.	அமிர்தராஞ்ஜநி	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் ...	0	8	0

குறிப்பு:-ஸ்டாக்கிலில்லாத சங்கப்பிரசுரங்களும் செந்தமிழ்ப்பிரசுரங்களும் இதில் குறிக்கப்படவில்லை. மறுபடி அச்சிட்டு வெளியானதும் இப்பட்டியலில் சேர்க்கப்படும்.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்" செந்தமிழ் "ப்பத்திரிகைக்கு வருஷசந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷசந்தா ரூ 4—8—0. இதுவரை 45 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0 வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 5—0—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணன்,
மானேஜர்.